TANJORE BOOKS MART
DEALERS IN OLD BOOKS & MAGAZINES
NEAR KAPALI TEMPLE

# மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

1 - 8 - 54 | இதழ் 7

## றா பொம் பொருந் தி!

நெசவுத்தொழிலில் இயந்திரத் தறியை வீ என்பவர் கண்டுபிடித்த விதர்.

அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

# அறிஞர் அண்ணாவின்,

## தெருக்கூத்து வேடிக்கை

தெருக்கூத்து வேடிக்கை பார்ப்பதில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு இளம் வயதிலிருந்தே விருப்பம் நிரம்ப உண்டு. தெருக்கூத்தை ஒரு பொழுதுபோக்காகவும், நகைச்சுவை பருகும் வாய்ப்பாகவும் கொள்ளுவது அவரது பண்பாகும். தெருக்கூத்து நடிகர்களின் உணர்ச்சிகரமான நடிப்புகளில் ஒன்றி நின்று, நடிப்பின் நயத்தை வியந்து, அகமகிழ்ச்சி கொள்வதிலே அறிஞர் அண்ணா அவர்களுக்கு எப்பொழுதும் ஆவல் உண்டு.

அவரின் பள்ளிப்பருவ காலத்தில் காஞ்சியில் எங்கு தெருக்கூத்து நடந்தாலும், அங்கு முதலில் சென்று உட்கார்ந்து, இறுதிவரையில் இமைகொட்டாமல் பார்த்திருந்துவிட்டு, கூட்டம் கலைந்து எல்லோரும் வீடு திரும்பியதற்குப் பிறகு, கடைசியாக வீடுவந்து சேருவது அவரது வழக்கம். இப்பொழுதும் சுற்றுப் பயணத்தை ஒட்டி வெளியூர் நோக்கிச் சென்றுகொண்டிருக்கும்போது, எங்கேயேனும் சாலை ஓரத்தில் தெருக்கூத்து நடைபெற்றுக்கொண்டிருந்தால், தாம் ஏறி வரும் நிலவூர்தி (கார்) வண்டியைத் தொலைவில் நிறுத்திவைத்துவிட்டு, யாரும் அறியாவண்ணம், ஒதுக்கமான இடத்தில் நின்றுகொண்டு காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருப்பார். அறிஞர் அண்ணா அவர்கள் தங்களது தெருக்கூத்தைக் கண்டுகொண்டிருக்கிறார்கள் என்று செய்தி எப்படியேனும் தெரிந்துகொண்டுவிடும்போதெல்லாம், தெருக்கூத்து நடிகர்கள் மிக உணர்ச்சியோடும், மகிழ்ச்சியோடும் நடிக்கத்தொடங்கிவிடுவார்கள்.

அண்ணா அவர்கள் ஆரம்பப்பள்ளி மாணவராக இருந்தபோது, அவரோடு ஒத்த அவருடைய நண்பர்களைக் கூட்டிக்கொண்டு, தமது வீட்டுக்கு அடுத்துச் சில வீடுகள் தள்ளி, ஒரு வீட்டின் மாட்டுக்கொட்டிலில் வேடங்கள் புனைந்துகொண்டு நாடகம் ஒன்று நடத்திக்கொண்டிருந்தார்களாம். அச்செய்தியை அறிந்த அண்ணாவின் பாட்டியார் பொங்கி எழும் சினத்தோடு சென்று, நாடகம் ஆடிக்கொண்டிருந்த அண்ணா அவர்களை, வேடத்தோடு பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, வீட்டில் வைத்து அவர்களின் முதுகில் சில அடிகள் சாத்தினார்களாம். அப்பொழுது அண்ணா அவர்களுக்கு நடிப்பதுபற்றி அச்சம் பிறந்தது என்றாலும், நடிப்பதிலே அவர்கள் கொண்டிருந்த ஆர்வம், நாளுக்குநாள் மேலோங்கி, அந்த அச்சத்தை அடியோடு அகற்றிவிட்டது.

சிறு வயதிலிருந்தே அண்ணா அவர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டெரிந்த ஆர்வந்தான் நாடகம் எழுதுவதிலும், நாடகம் நடிப்பதிலும் மிகச் சிறந்த பேரறிஞராய் ஆக்கிவிட்டிருக்கிறது.

இயக்கக் கருத்துக்கள் அடங்கிய நாடகங்களைத் தெருக்கூத்து நடிகர்களைக் கொண்டு, ஆங்காங்கு, பரந்த வெளிகளில், எளிய முறையில் நடத்திக்காட்ட வேண்டும் என்பது அறிஞர் அண்ணாவின் நீங்கா விருப்பமாகும். கற்றறிவற்ற பாமரமக்களின் பொது அறிவு வளர அது சிறந்த ஏற்ற கருவியாக விளங்கும் என்பது அண்ணாவின் உறுதியான எண்ணமாகும்.

0195


# மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

1-8-54 ஞாயிற்றுக்கிழமை


## குறள் செல்வம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கூடிய தமிழாசிரியர் மாநாட்டுத் தீர்மானப்படி, ஜூலை இறுதி வாரம் குறள் வாரமாக, தமிழகத்தின் பல இடங்களிலும் சிறப்புறக் கொண்டாடப் பட்டிருக்கிறது.

தமிழிலக்கியத்தின் கருவூலங்களாக விளங்குவது சங்க இலக்கியங்களாகும். அவற்றினுள், எடுத்த பொருளை வரையறுத்து, தமிழ்ப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது திருக்குறளாகும். இருபது நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயற்றப்பட்டு, இன்றைக்கும் பிற நாட்டினர் கண்டு வியப்புறும் வகையில், கருத்துத் தெளிவும், சொற்செறிவும் பெற்று, திருக்குறள் விளங்குகிறது.

பிற்காலத்தில் எழுந்த மதச் சார்புடைய நூல்களைப் போலல்லாமல், தமிழ்நாட்டுக்குப் புறம்பான, தமிழகத்தைத் தாழ்த்துகிற பிற நாட்டுக் கருத்துக்களையும் கலாசாரங்களையும் போற்றுகிற இலக்கியங்களைப் போலல்லாமல், கடவுள் பேரைச்சொல்லி, கருத்துக்கொவ்வாத கற்பனைகளை வைத்து எழுதிய புராண இதிகாசங்களைப்போலல்லாமல், திருக்குறள் தனித் தமிழ் நூலாக, தமிழர் பண்பாட்டின் விளக்கமாக, தமிழகத்துக்கொரு தலைசிறந்த இலக்கியமாக இருக்கிறது. ஆனாலும், புராண இதிகாசங்களுக்கு, கற்பனைக்காவியங்களுக்கு காட்டப்பட்ட ஆதரவு, கொடுக்கப்பட்ட பெருமை, எவ்வாறோ திருக்குறளுக்குத் தரப்படவில்லை. அரிமா இருந்து முழங்கவேண்டிய இடத்தில் சிறு நரி நின்று கூவுவதைப்போல, கடல்முத்து ஒளி வீசவேண்டிய இடத்தில் கண்ணாடிக்கல் காணப்படுவதைப்போல, கொல்லையில் முல்லை மலர்ந்திருக்க ஊரின் கோடிசென்று எருக்கம் பூவைப் பறித்து வந்து அழகு பார்ப்பதைப் போல, கருத்துகள் குவிந்திட்ட குறள் இலக்கியத்தை மறந்து, தமிழ்நாட்டார் புராண இதிகாசங்களின் மகிமையில் சிக்குண்டு கிடந்தனர். இராமாயணப் பிரசங்கங்கள், பாரதக் காலட்சேபங்கள், கந்தபுராண உபந்நியாசங்கள், வேத பாடசாலையில் உபநிஷத்துக்களின் விளக்கங்கள் போன்ற தமிழ்ப் பண்புக்கு ஒவ்வாத கதைகளும், கருத்துக்களும் நாட்டில் இடம்பெற்றிருக்கும்பொழுது, திருக்குறள் மட்டும் இடம்பெறவில்லை. பத்திரிக்கையைப் புரட்டினால், பத்து இடங்களில் இராமாயணப் பிரசங்கத்தைப் பார்க்கலாம், ஒரு இடத்திலாவது குறள் பற்றிய சொற்பொழிவு நடைபெறுவதாக இருக்காது. குசேலாகுலோபாக்கியானத்துக்குக் கிடைக்கிற இடம், குந்திதேவி கன்னியாக இருக்கும்பொழுதே ஐந்து புத்திரர்களைப் பெற்றெடுத்த கதைக்குக் கிடைக்கிற இடம், திருக்குறளுக்குத் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. வந்த கதைகளுக்கு, வாழ்வுக் கொவ்வாத—பார்க்கப்போனால் வாழ்வை நஞ்சாக்கும் மூடக்கருத்துக்குத் தரப்பட்ட மதிப்பும் சலுகையும், குறளுக்குத் தரப்படாத காரணத்தால், நாட்டு மக்களுக்கு குறளின் அருமை பெருமைகள் தெரியாதுபோயிற்று. இதிகாசங்களும், புராணங்களும் முன்வரிசையில் இடம்பெற்றுவிட, இலக்கியவரிசையில் முதலிடம் பெறவேண்டிய அருந்தமிழிலக்கியங்கள், பின்னால் தள்ளப்பட்டு, மக்களின் பார்வையிலிருந்து மங்கியிருந்தன.

தமிழ்ப் பண்பாடு—தமிழிலக்கியம், தூசு படிந்த ஓவியமாக, மாசுபடிந்த சிற்பமாக, உறையுள் வைக்கப்பட்ட யாழாக, மக்களிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது. பிறரின் வருகையால் ஏற்பட்ட தூசி, தமிழ்ப் பண்புக்குப் புறம்பான கலாசாரம் வீசிய மாசு, இவை அழகான ஓவியத்தை, சிறந்ததொரு சிற்பத்தை மறைத்துக்கொண்டிருக்கின்றன. தூசி நீக்கப்பட்டால், மாசு அகற்றப்பட்டால், ஓவியமும், சிற்பமும் அழகுபெறும். தமிழிலக்கியமும், மக்கள் மனதில் நிலையான இடத்தைப் பெறும்.

திருக்குறளில் பொதிந்திருக்கும் பல உயரிய கருத்துக்கள் நாட்டு மக்களிடம் இடம்பெறுமானால், இன்று சூழ்ந்துள்ள பிற்போக்குக்

கருத்துக்கள் அகலுவதுடன் நாடு அறிவு வளர்ச்சியுறுவதும் திண்ணம்.

பிறப்பின் காரணமாகக் கற்பிக்கப்பட்ட ஜாதிபேதங்களே, இன்றைய சமூகத்தைச் சீரழித்தவரும் பெருங்கேடுகளாக இருக்கின்றன. நான்கு சாதிகளெனவும், அதில் நாலாயிரம் உட்பிரிவுகளெனவும் சமூகத்தைக் கூறு போட்டுக்கொண்டிருப்பது மனு நீதி முறையாகும். பிறப்பிலேயே ஒருவனது உயர்வு, தாழ்வு உண்டாகிவிடுகிறது, அந்த ஆரிய தர்மப்படி. உயர் சாதியில் பிறந்தவன் எவ்வளவுதான் கேடுடையவனென்றாலும், அவனுக்குச் சமூகத்தில் சாதியில் உயர்ந்த இடம் கிடைக்கின்றது. தாழ்ந்த சாதியில் பிறந்தவனுக்கு எவ்வளவுதான் அறிவு, ஆற்றல் இருந்த போதிலும் அவன் உயர்ந்த சாதியினருக்கு ஒத்தவனாக ஆகமுடியாது. இவ்வாறு பிறப்பிலே பேதங்காட்டுவதுதான் வர்ணாச்சிரமத் திட்டம், அதை வகுத்திட்ட மனுநீதி, அதைப் புகுத்திய ஆரிய கலாசாரம். ஆனால் தமிழ்ப் பண்பாட்டுக்கு நீதிநூலாக விளங்குகிற குறள் "பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்" என்று தெளிவாக, பிறப்பிலே வேறுபாடு கிடையாது, ஒத்த நிலையே என்று வலியுறுத்துகிறது.

"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்" என்ற வள்ளுவரின் கருத்துப் பரவுமேயானால், நாட்டிலே காட்டப்படும் சாதிப்பாகுபாடுகள் மறையும்.

"சொன்னதை நம்பினால் மோட்சம், நம்பாவிட்டால் ரௌரவாதி நரகங்கள்தான் கிடைக்கும்!" என வேதங்களும், புராணங்களும் மக்களைப் பயமுறுத்துகின்றன. இவ்விதக் கடுமையான மதக்கட்டளைகளால், மக்களின் அறிவு வளர்ச்சி மங்கி, கண்மூடித்தனமாக எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டனர். இதனால்தான் சங்ககாலத்தில் பரந்துகிடந்த அறிவு வரவரக் குறைந்து, செயலற்றதாகிவிட்டது. கடவுள் பேரைச்சொல்லி, காருத்தனின் பேரைச் சொல்லி, மதத்தின்பேரைச்சொல்லி, மனுமாந்தாதாவின் பேரைச்சொல்லி, எழுதப்பட்ட கற்பனைகளும், சொல்லப்பட்ட கதைகளும், கண்மூடிப் பழக்கத்தால் மக்களிடை ஆதிக்கம் பெற்றன. அவற்றிலுள்ள பொய்களையும் புனைந்துரைகளையும், சீர்தூக்கிப் பார்க்க மக்கள் அஞ்சினர், பக்தியின் காரணமாக, பயத்தின் காரணமாக. இத்தகையக் கண்மூடித்தனத்தை வள்ளுவர் ஏற்றுக்கொள்ளவில்லை. அறிவு என்றால் ஒன்றைச் சீர்தூக்கிப் பார்த்துப் பின்தான் ஏற்றுக்கொள்ளவேண்டும். அது எவ்வளவு பெரிய உயர்ந்த பொருளென்றாலும், பகுத்தறிந்து பார்த்தபின் ஏற்றுக்கொள் என்றே வள்ளுவர் அறிவுறுத்துகிறார்.

**எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு.**

அதுமட்டுமல்ல, ஒரு கருத்தை யார் வெளியிட்டாலும் சரி, கருத்தைச் சொல்லுபவரின் பெருமையை வைத்துக்கொண்டு, கருத்தை அப்படியே ஒப்புக்கொள்ளக்கூடாது. சொல்பவன் மாதேவனாயினும் சரி, மண்டலாதிபதியாயினும் சரி, சொல்லப்பட்ட பொருளை ஓர்ந்து உண்மைக் காண்டலே சிறப்புடையது என வள்ளுவர் கூறுகிறார்.

**"எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"**

கொடுக்கப்பட்டக் கருத்துக்குள்ள மதிப்பையோ, பெருமையையோ கவனிக்காமல், சொல்பவரின் மதிப்பையோ, பெருமையையோ கவனிக்காமல், பொருள் எத்தன்மைத்தாயினும், சொல்பவர் எவராயிருந்தாலும், உண்மையை ஆராய்தலே அறிவுடைமை என்று குறள் நெறி கூறுகிறது. பகுத்தறிவு என்று கூறப்படுவதற்கு, வள்ளுவர் சொல்லுகிற முறை சிறந்த இலக்கணமாகும். குறளின் கருத்துக்கள் நாட்டில் பரவுமேயானால், கண்மூடித்தன்மை நீங்கி, அறிவு வளர்ச்சியடைதல் எளிதாகும்.

குறளில் காணப்படும் பல கருத்துகள், வேறுபட்ட கொள்கையினராலும், வேறு வேறு காலத்தாலும் போற்றப்படுவதாக அமைந்திருக்கின்றன. காரணம் அதில் காணப்படும் பொதுமை நோக்கு முதன்மையானது. எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும், அதை எந்தச் சார்புமின்றி, நடுவு நிலைமையால் ஆராய்ந்தே வள்ளுவர் கருத்தை விளக்க முற்படுகிறார். ஒரு பொருளை ஆராய்வதற்கு முன்பே, முடிவை எடுத்துக்கொள்ளாததால், பல்வேறு கொள்கையினராலும் வள்ளுவரது குறளைப் படிப்பதற்கும், அதனுள்ள கருத்துக்களை அறிவதற்கும் தடையெதுவுமில்லாமலிருக்

தது. வள்ளுவர் கொண்ட பொதுமை நோக்கு, இன்றைய தமிழ்நாட்டிற்கு வேண்டற்பாலது. திருக்குறள் கருத்துக்கள் பரவுவதால், அந்தப் பொதுநோக்குத் தமிழகத்தில் பரவுவதாக!

குறள் சங்ககாலத் தமிழகம் தரும் சிறந்த தொரு கருவூலம், பிறருக்கு அடிமைப்படாது, பிறருடைய மயக்கு வேதாந்தங்களுக்கும், மாயா வாதங்களுக்கும் அடிமைப்படாது, அறவழி நின்று, பொருள்வளம் பெற்று, வாழ்க்கை இன்பத்தை நுகர்ந்து, மக்கள் வாழ்ந்த தமிழகத்தில் தோன்றிய தலைமை இலக்கியம் திருக்குறளாகும்.

குறள் ஏட்டில், அறிவும், திறனும், அன்பும்' அருளும், கூட்டப்படுகின்றன; உழவின் மேன்மை, உழைப்பின் உயர்வு காட்டப்படுகிறது; இல்வாழ்க்கையின் இன்பம், மக்களைப் பேணி வளர்க்கும் தன்மை கூறப்படுகிறது; நாடு, நாட்டின் பண்பு, நாடாளும் முறை வரை யறுத்துக் கூறப்படுகிறது; "கண்ணொடு கண்ணிணைக்கும்" காதற்காட்சி, கற்பின் மாட்சி அதில் படம்பிடித்துக் காட்டப்படுகிறது; யாழும், குழலும், சிறுவர் மழலையும் அதில் இசைக்கின்றன, செவிக்கும் சிந்தைக்கும் இனிதாய். காதலும் வீரமும், அறிவும் அன்பும், திறனும் செயலும் பொருந்தி, அன்று தமிழர் நடாத்திய அருமந்த வாழ்வின் வண்ண ஓவியமாகத் திருக்குறள் இருக்கிறது.

வள்ளுவரின் முப்பாலின் கருத்துக்கள் நாட்டின் நாற்பாலும் பரவினால், இருளும் இன்னலும், துயரும் துன்பமும் நாட்டைவிட்டு அப்பால் செல்லும். இப்பால் அறமும், பொருளும், இன்பமும் சேர்ந்து, நாடு வளமுறும்.

திருக்குறளின் கருத்துக்கள் பரவ, குறள் வாரம் நல்லதொரு ஆரம்பமாகும். அதன் சிறப்பு ஆண்டுதோறும் வளர்வதுடன், இது வரைப் புதைந்துகிடந்த குறள் செல்வம் இனி நாட்டுக்குப் பயன்படுவதாக என நமது வாழ்த்துதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

---

### குறள் பெருமை

வள்ளுவர்செய் திருக்குறளை
மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி
யொருகுலத்துக் கொருநீதி.

—மனோன்மணீயம்.

---

## [illegible]

## போரிடு! போரிடு! பொல்லாங்கை ஒழிக்கப் போரிடு!

சமுதாயத்திலே உள்ள சாதிச் சனியன், சனாதனக் கேடு, வைதிகக் கொடுமை ஆகியவைகளை நாம் காணும்போது, நமது கண்களில் அனலும் புனலும் கொப்பளிக்கின்றன. எப்பாடுபட்டேனும் இவைகளைக் களைந்தெறியவேண்டும் என்ற எண்ணம் உண்டாகிறது. மகத்தான வேலை. அதனை நாம் மேற்கொண்டுவிட்டோம். அளவு, நிலைமை, கஷ்டநஷ்டக் கணக்கு இவைகளைக்கூடக் கவனிக்கவோ, இவைபற்றிக் கவலைப்படவோ கூட நேரமோ நினைப்போ இருப்பதில்லை. "போரிடு! போரிடு! பொல்லாங்கை ஒழிக்கப் போரிடு! அநீதியை அழிக்கும் அறப்போரில் ஈடுபடு!" என்று உள்ளம் தூண்டியபடி இருக்கிறது. நம்மால் அந்த எழுச்சிக் குரலினின்றும் தப்ப முடியவில்லை.

"மிகப்பெரிய இக்காரியத்தைச் சாதிக்கத் தேவையான அளவு பணம் இல்லையே, வாழ்விலே நிம்மதி இல்லையே வசதி இல்லையே, உதவி இல்லையே" என்று மனதுக்குக் கூறினாலோ, மனம் "ஆமாம்; அதனால்தான் உன்னை நீ ஒப்படைத்துவிடு இக்காரியத்துக்கு. இதனால் உனக்கு என்ன கஷ்டம் வரும்? மாளிகை பறிபோகுமா? மிட்டா கலையுமா? ஆலை அழியுமா? சோலையில் உலவிடும் இன்பத்தை இழக்கவேண்டிவருமா? நீ இவைகளற்றவன், இழக்க என்ன இருக்கிறது உனக்கு? ஏன் உனக்குக் கலக்கம்? எழு! போரிடு!" என்று மேலும் தூண்டியேவிடுகிறது.

விடுதலைக் கிளர்ச்சிக்கு, வித்து ஊன்றிவிட்டோம்; உழைப்புத் தியாகம் எனும் நீர்ப்பாய்ச்சும் காலம் வந்துவிட்டது; வீரர்களே எழுவீர்!

—அறிஞர் அண்ணாதுரை.

# சென்னையில் புரட்சி!

முன்னறிவிப்பு எதுவுமின்றி, கேட்போர் எவரையும் தூக்கிவாரிப்போடும் விதத்தில் இந்தச் செய்தி வந்தது.

"புரட்சியா? அதுவும் நமது சென்னையிலா? அதுவும் நாம் எவரும் அறியாமலா?" என்று பலர் ஆச்சரியப்படலாம்.

"புரட்சியா? ஐயோ, அது இங்கும் வந்து விட்டதா?" என்று சிலர் கலக்கமடையலாம்.

ஆனாலும் அந்தப் புரட்சி சாமான்யமானதல்லவாம்! வெளிநாடுகளிலெல்லாம் இதைப் பற்றிக் கேள்விப்பட்டு, விசாரிக்கிறார்களாம்.

இந்தப் புரட்சியைப் பற்றிய செய்தி சாதாரண மனிதரிடமிருந்து வரவில்லை. சென்னையின் முன்னாள் மேயராக இருந்தவர்.

இருந்தாலும் செய்தியில் ஏதாவது பொய், புனைந்துரை......? சே, சே சந்தேகிப்பதே தவறு, அவர் முன்னாள் மேயர் மட்டுமல்ல, சன்மார்க்க சம்வர்த்தினி சபையின் தலைவர். எனவே அவர் கூற்றில் புனைந்துரை எதுவும் இருக்கமுடியாது.

அத்தகைய முன்னாள் சென்னை நகரத் தலைவர், இப்பொழுது மாம்பலம் சன்மார்க்க சம்வர்த்தினி சபையின் தலைவர், ஆகிய ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் அறிவித்துள்ளார் "மாம்பலத்தில் மட்டுமல்ல, சென்னையிலேயே அவர் ஒரு புரட்சியை உண்டு பண்ணிவிட்டார். நான் வெளிநாடுகளுக்குச் சென்றிருந்தபோது, அங்குகூட மக்கள் இதைப் பற்றி என்னை விசாரித்தார்கள்" என்று.

மாம்பலத்திலா? புரட்சியா? அதை உண்டாக்கிய 'அவர்' யார்? என்று கேட்கிறீர்களா?

புரட்சியை உண்டாக்கியவரின் பெயர், வைதிக தர்மசம்ரட்சக, உபந்யாசச் சக்ரவர்த்தி, ஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீட்சிதர் என்பதாகும்.

அந்தப் புரட்சியை ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் எப்படி உண்டாக்கினார் என்றால், தமது மகாபாரத உபந்யாசத்தால்!

கடந்த மூன்று மாதங்களுக்குமேல் உபந்யாச சக்ரவர்த்தியின், பாரத காலட்சேபம் மாம்பலத்திலுள்ள சிவ-விஷ்ணு கோயிலில் நடைபெற்றதாம். அதற்கு ஆஸ்திகர்கள் பெருவாரியாகக் கூடினார்களாம். கடைசியாக நடந்த தர்மபுத்திர சாம்ராஜ்ய பட்டாபிஷேகத் தினத்தன்று, உபந்யாசகரைப் பாராட்டிப் பேசும் பொழுதுதான் "மாம்பலத்தில் மட்டுமல்ல, சென்னையிலேயே தீட்சிதரின் பிரசங்கங்கள் ஒரு புரட்சியை உண்டாக்கிவிட்டன!" என்று கூறியுள்ளார். மறுநாள் காலட்சேபத்தில், ஆச்சாரியார் அவர்கள் ரூ. 4001 பணமுடிப்பை அனந்தராம தீட்சிதருக்குக் கொடுத்தாராம்.

புரட்சி என்பது சமுதாய அமைப்பின் அடிப்படையில் ஏற்படும் மாபெரும் மாறுதல்களுக்குக் காரணமாயிருப்பதாகும். ஆனால் மாம்பலத்தில் ஒரு தீட்சிதர் செய்கிற பாரத காலட்சேபங்கூட புரட்சிக் காரியமாகப் பேசப்படுகிறது!

புரட்சிக்குத் தாங்கள்தான் கர்த்தாக்கள் என்று கருதிக்கொள்ளும் கம்யூனிஸ்ட்கள் ஒருவேளை இத்தகைய பாரத காலட்சேபப் புரட்சிகளை வரவேற்றாலும் வரவேற்கலாம். "பாரத காலட்சேபம் என்றால் சாமான்யமா? சென்னையில் மட்டும் பல இடங்களில் பாரத காலட்சேபம் ஒவ்வொரு நாளும் நடக்கிறது, பக்தர்கள் கூடுகிறார்கள் என்றால் என்ன அர்த்தம். மக்களை கூட்டுவிக்கும் சக்தி அந்த பாரதக் கதைக்கு இருக்கிறது, அந்தக் கண்ணோட்டத்தில் பார்த்தால், பாரதக் காலட்சேபம் ஒரு மக்கள் சக்தியாகும், பாரதக்கதையின் போக்கில் புரட்சிக் கருத்துக்களெல்லாம் பொதிந்திருக்கிறது. பஞ்சபாண்டவர்கள், சமாதானம், ஜனநாயகம், சமதர்மம், முற்போக்கு, ஜனசக்தி இந்த ஐந்தின் எடுத்துக்காட்டாக இருக்கிறார். துரியோதனாதியர்கள் ஏகாதிபத்தியத்தின் பிரதிபிம்பங்கள். எனவே பாரதப்போர் நாங்கள் கூறுகின்ற வர்க்கப்போராட்டத்தின் அவசியத்தை விளக்குவதாகும். பாரதக்கதையின் மேன்மை வெளிப்பட்டால் புரட்சிக் கருத்துக்கள் தாமாக வளரும்!" என்று கம்யூனிஸ்ட் நண்பர்கள் கூறக்கூடும். எனவே, காரைக்குடியில் கம்பராமாயண பாகவதராகக் காட்சியளித்த ஸ்ரீலஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள், மாம்பலம் சிவ-விஷ்ணு கோயிலில் பாரத காலட்சேபம் செய்தால், அது ஸ்ரீ அனந்தராம தீட்சிதர் செய்கிற "புரட்சிக்கு" உதவியாக இருக்கும். பாரத காலட்சேபத்தால் "புரட்சி" உண்டாகிறதென்றால், "புரட்சி" வீரர்கள் பாரத காலட்சேபம் ஏன் செய்யமாட்டார்கள்?

# கருத்துக் கதிர்

## உழைப்பின் மேன்மை பற்றி

சென்னைக் கல்லூரி ஒன்றில் பேசவந்த மாஜி முதன்மந்திரி—மாம்பலத்து மதியூக தந்திரி—ஆச்சாரியார் அவர்கள், மாணவர்களைப் பார்த்து, “உழைக்கப் பழகுங்கள்' மாணவர்கள் உடலை வளைத்து வேலைசெய்யப் பழகிக்கொள்ள வேண்டும்! உழைப்பின் பெருமையை உணர்த்தாதக் கல்வி உண்மைக் கல்வியல்ல” என்று பேசியுள்ளார்.

இதுபோல உழைப்பின் மேன்மையைப்பற்றி ஆச்சாரியார் அடிக்கடிப் பேசுகிறார். அதிலும், பள்ளிக்கூட மாணவர்கள், இளஞ்சிறுவர்கள் இவர்களைப் பார்க்கும்பொழுது ஆச்சாரியார் அந்த உபதேசத்தை அருளத் தவறுவதில்லை. புதிய ஆரம்பக்கல்வியைப் புகுத்தியபொழுதுகூட, அதற்கு ஆதரவுதேடும்வகையில் “மாணவர்கள் தொழிலுக்கு மதிப்புத் தரவேண்டும்!” என்று கூறினார்.

“உழைக்கப் பழகுங்கள்” என்று ஆச்சாரியார் பள்ளிக்கூட மாணவர்களிடம் மட்டும் ஏன் வலியுறுத்திவருகிறார் என்று புரியவில்லை. “பள்ளிக்கூடங்கள் வெறும் பொழுதுபோக்கும் உல்லாசக் கூடங்களாக இருக்கின்றன” என்று அவர் நினைத்துக்கொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. உழைப்புக்கு மேன்மை என்ற கருத்தில் அவருக்கு உண்மையான நம்பிக்கையிருக்குமானால், பள்ளிக்கூட மாணவர்களிடம் மட்டும் வலியுறுத்திவராமல், பொதுவாக எல்லாரிடமும் சொல்லிவரவேண்டும்.

இன்றுள்ள கல்வி முறையிலோ, கல்வி சற்கும் இளைஞர்களிடமோ “உழைப்பது கூடாது!” என்ற எண்ணம் நிலைபெற்றிருப்பதாகக் கூற முடியாது, இன்று சமுதாய அமைப்பில், ஜாதிய பாகுபாடுகளில்தான், உழைப்புக்கு மேன்மை தரவில்லை. மனு மாந்தாதா செய்து தந்த வர்ணாச்சிரம முறைதான், உழைப்பவனைத் தாழ்ந்தவனாக்கி, உழைக்காது வாழும் உலுத்தர்களை உயர்ந்தவர்களாக்கி வருகிறது. உழைப்புக்கு மேன்மை என்ற உயர்ந்த நோக்கம் ஆச்சாரியாருக்கு இருந்தால், மனுதர்மத்தை எதிர்க்கவேண்டும், மாந்தாதா எழுதியதை மறுக்கவேண்டும், வர்ணாச்சிரம முறையை ஒழிக்கப் பாடுபடவேண்டும். ஆச்சாரியார் முன்வருவாரா?

உழைப்பின் மேன்மை என்றால், அதோ! வயலில் உடலை வளைத்து, வியர்வையை நீராக்கி, களையெடுத்துக், கதிர்காணும் உழவர் கூட்டம்! அவர்களல்லவா சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கவேண்டும், வர்ணாச்சிரமத்திட்டத்தின்படி, ஆரிய தர்மப்படி, அவர்கள்தான் தாழ்ந்தவர்களாக, தீண்டப்படாதவர்களாக, சேரியில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆனால் வளையாமல், நிமிராமல், உழைக்காமல், பாடுபடாமல் ஆனால் வாழ்வதற்கு மட்டும் வழிவகுத்துக்கொண்ட கூட்டம் உயர்ந்த ஜாதி, பிரம்மகுலம் என்று வயிற்றைத் தடவிக்கொண்டு, முப்புரி நூலைக் காட்டிக்கொண்டு உலவுகிறது. செந்நெல் குவிக்கும் உழைப்பவர்கள் தாழ்ந்தவர்களாய், நித்திய தரித்திரர்களாய் உழல்கின்றனர். சிறு புல்லேந்தும் கூட்டம் போகபோக்கியங்களில் புரள்கிறது. இதில் எங்கு தொழிலுக்கு மேன்மை தரப்படுகிறது. ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு உழைக்கிறானோ அந்த அளவுக்கு ஜாதியில் தாழ்ந்தவனாகிவிடுகிறான். எனவே தொழிலுக்கு மேன்மை தரவேண்டுமென்றால், சமுதாய அமைப்பை, சாதிப்பிரிவுகளை, மனுதர்மத்தை, வர்ணாச்சிரமத் திட்டத்தை மாற்றியமைக்கவேண்டும்.

தொழிலின் மேன்மையை விளக்கவேண்டுமென்றால், நாட்டில் உழைப்பவர்கள் தொகை உயரவேண்டுமென்றால், வேத பாடசாலையில் பேசும்பொழுது “வேதோத்தமர்களே! வேதியர்குலச் சிரேஷ்டர்களே! நீங்கள் வேதமோதி பிழைத்தலை மட்டும் செய்துகொண்டிருக்கக் கூடாது. உழைக்கப் பழகுங்கள்! வேள்விக் கூடத்தில் நெய்யை விட்டுப், புகையைக்கிளப்புவதை நிறுத்தி, வயலில் இறங்கிக், கொஞ்சம் வியர்வையைச் சிந்தி, வளத்தை அதிகரிக்கச் செய்யுங்கள்!” என்று கூறலாம். மந்திரத்தை முணுமுணுப்பவர்களிடம் மண்வெட்டியைக் கொடுத்தனுப்பினால், முப்புரி தடவுபவர்களிடம் ஏற்றக் கயிற்றைக் கொடுத்து தண்ணீர் இறைக்கச் செய்தால், தர்ப்பையை ஏந்தி யஞ்ஞம்

செய்கிறோம் என்பவர்களிடம் நாட்டு நலத்துக்காகக் கலப்பையைத் தந்து, வயலுக்கு அனுப்பினால், வர்ணாச்சிரமத் திட்டத்தைக் காட்டி வாழ்வில் வளம்பெறுபவர்களைப் பார்த்து, வரப்பிலே உழைத்தால்தான், உடம்பு வளைந்து பாடுபட்டால்தான் உங்களுக்கு உணவு என்று சொன்னால், பல்லக்கேறுபவனை பாடுபடச் செய்து, உல்லாச வாழ்வினரை உழைக்கும்படிச் செய்து, சுரண்டிவாழும் தன்மைக்குச் சமூகத்தில் இடமில்லையென்று செய்தால், உழைப்புக்கு மதிப்புக்கொடுத்ததாகும்.

உழைப்புக்கு மதிப்பில்லையென்றால், உழைப்பினால் வரும் பலன் குறைவாயிருக்கிறது. காரணம் உழைப்பில் கிடைக்கும் பலன், உழைப்பவனுக்குச் சேராமல், மத்தியிலிருக்கும் உழைக்காத பலரால் பங்குபோடப்பட்டுவிடுகிறது. எனவே உழைப்பின் பலன் குறைந்துவிடுகிறது. உழைப்பின் மேன்மையை உயர்த்தவேண்டுமென்றால், உழைப்பினால் கிடைக்கும் பலனை உயர்த்தவேண்டும். அதற்குப் பொருளாதாரச் சமத்துவமும், சமூகத்தின் அடிப்படையில் ஜனநாயக நோக்கும் உண்டாக வேண்டும். ஆச்சாரியாரின் வாய் வேதாந்தத்தினால், அவை உண்டாகாது.

“உழைக்கப் பழகுங்கள்” என்று பள்ளிக்கூட மாணவர்களை வற்புறுத்தும்பொழுது, இப்பொழுதுள்ள கல்விமுறையால் உழைப்பதற்கு மாணவர்கள் பின்வாங்குகிறார்கள் போலவும், அதனால் உழைப்பவர்கள் தொகை குறைந்துவிட்டதுபோலவும், குறைந்துபோன உழைப்பாளர் தொகையை நிறைவுபடுத்தத் தாம் பாடுபடுவதுபோலவும் ஆச்சாரியார் பேசுகிறார். உண்மையான நிலை, உழைப்புக்குத் தகுந்த பலன் கிடையாது என்பதுடன், உழைக்கத் தெரிந்தவர்களுக்கே வேலை கிடைக்காமல் இருக்கிறது. இது ஆச்சாரியார் நினைப்பது போலக் கல்விமுறையில் ஏற்பட்ட குறைபாடல்ல. சமுதாயத்தின் அமைப்பில், பொருளாதார ஏற்பாட்டில் காணப்படும் குறைபாடுகளாகும். இந்தக் குறைபாடுகளை நீக்கவேண்டுமேயன்றி, ஆச்சாரியாரைப்போல் பள்ளிக்கூட மாணவர்களைப்பார்த்து, “உடலை வளைத்து, உழைக்கப் பழகுங்கள்!” என்று இதோபதேசம் செய்துவிட்டால் போதாது. அத்தகைய உபதேசங்களையெல்லாம், விதைக்காது அறுத்து, உழைக்காது உண்டு, பிறருடைய உழைப்பைச் சுரண்டிவாழும் திருக்கூட்டத்திடம், பெரியமனிதர்களிடம் ஆச்சாரியார் நிகழ்த்தினால், அதற்கு ஏதாவது அர்த்தமிருக்க முடியும். அப்படியின்றி மற்றவர்களிடம் அந்த உபதேசங்களைச் செய்வது, புளியேப்பம் பிடித்தவனிடம் பசியெடுக்கவேண்டியதின் அவசியத்தைச் சொல்வதைப்போலிருக்கிறது!

## தகுதி - திறமை

தகுதி திறமையென்பவை ஒரு பகுதியினருக்கு மட்டும் சொந்தமானவையல்ல. ஆனாலும் சமூகத்தினால் காணப்படுகிற ஏற்றத்தாழ்வுகளால், பின்னணியில் வைக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு, சூழ்நிலை காரணமாக படிக்கும் வசதிகளும், கல்வியினால் முன்னேற்றமும் தடைப்படுத்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக அட்வகேட் ஆராவமுதாச்சாரியார் மகன் அனந்தராமனுக்கு இருக்கும் வசதியும், வண்டியோட்டும் வரதனின் மகன் மாடசாமிக்கு இருக்கும் வசதியும் ஒன்று எனக் கூறமுடியாது வக்கீல் வீட்டில் படிப்பின் வாசனை முன்பாகவே இருக்கிறது. வண்டியோட்டியின் வீட்டில், கல்வியறிவென்பதே கிடையாது. மேலும் வக்கீல் ஆராவமுதாச்சாரியாரின் செல்வாக்கு, பணம், இனம் எல்லாம் அவருடைய மகன் படிப்பை முடித்து, அவனையும் ஒரு வக்கீலாகவோ, டாக்டராகவோ, என்ஜினியராகவோ ஆக்கிவிடுகிறது. வரதனுக்குக் கிடைக்கும் அன்றாடக் கூலி தவிர வேறு சேமிப்பு எதுவும் கிடையாது. அவன் மகன் மாடசாமி படிக்க வேண்டுமென்ற விருப்பமிருந்தாலும், படிக்க வைக்கக்கூடிய பணவசதியோ, பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் இடம்பெறும் செல்வாக்கோ அவனால் கனவிலும் நினைத்துப்பார்க்க முடியவில்லை. எனவேச் சூழ்நிலை காரணமாக, அட்வகேட் ஆராவமுதாச்சாரியாரின் மகன் கல்வியின் முழுப்பலனையும் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக்கொள்ளும்பொழுது, வண்டியோட்டியின் மகன் கல்வி நலனைப் பெற முடியாமல் தன் தந்தையைப்போல மற்றொரு வண்டியோட்டியாகவே ஆகிவிடுகிறான். இருவருக்கும் ஒரே அளவு கல்விகற்கும் ஆற்றலிருந்தும், பிறந்த சூழ்நிலை காரணமாகக் கல்வியின்

201

அட்டைப்பட விளக்கம் :

# சிறு பொறி பெருந் தீ

[illegible]

அறிவியல் கண்டுபிடிப்புகளில் மிகப்பல, சாதாரண நிகழ்ச்சிகளின் வாயிலாகப் பிறந்தவைகளேயாகும். ஆப்பிள் மரத்திலிருந்து கனியொன்று கீழே விழுந்தது கண்டான் ஐசக் நியூட்டன். அவனது எண்ணம் கனியை எடுத்து உண்பதில் செல்லாமல் கனி ஏன் பூமி நோக்கி விழவேண்டும் என்ற ஆராய்ச்சியைக் கிளறியது. அதன் முடிவாக பூமியின் இழுக்கும் சக்தியைக் கண்டறிந்தான். மாதாகோயிலுக்குச் சென்ற கலிலியோ அங்கு தொங்கும் சங்கிலி விளக்கு ஒன்று ஊசல் ஆடியது கண்டான். விளக்கு ஒருபுறமிருந்து மற்றொருபுறம் போய்த் திரும்பப் பிடிக்கும் கால அளவை, மனதில் 1, 2, 3...என்று கணக்கிட்டுக்கொண்டான். அந்த எண்ணிக்கை ஒவ்வொரு ஆட்டத்திலும் ஒரே அளவில் அமைவதைக் கண்டான். இந்த முடிபால் காலத்தை அளக்கக்கூடிய கருவியொன்றைச் செய்யலாம் என்ற எண்ணத்தை வெளியிட்டான். இதை அடிப்படையாகக்கொண்டு செய்யப்பட்டதுதான் இன்று நமக்கு உதவும் கடிகாரம். நியூட்டன், கலிலியோ இவர்களது வாழ்க்கையில் ஏற்பட்ட சிறு நிகழ்ச்சிகள் பெரிய உண்மைகளுக்குப் பிறப்பிடமாக அமைந்தன.

இதேபோன்று கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் வாழ்ந்த வில்லியம் லீ என்பார் ஒரு சிறு நிகழ்ச்சியின்மூலம் காலுறை தைக்கும் பொறியொன்றைக் கண்டுபிடித்தார்.

வில்லியம் லீ ஒரு நாள் வீட்டில் தங்கிப் புத்தகம் ஒன்றைப் புரட்டிக்கொண்டிருந்தார். அருகே அவரது மனைவியார் தனது குழந்தைக்குப் பால் கொடுத்துக்கொண்டு, குழந்தைக்கான காலுறை ஒன்றைப் பின்னிக்கொண்டிருந்தார். லீயின் கவனம் புத்தகத்தில் பதியவில்லை. புத்தகத்தை மூடிவிட்டுக் குழந்தையையும், மனைவியையும் நோக்கினார். குழந்தை கண்ணயர்ந்த நிலையில் மனைவி காலுறை தைப்பதில் கவனம் செலுத்தியிருப்பதைக் கண்டார். பொறுமையுடன் மனைவியின் விரல்கள் நூலை ஊசியால் கோர்த்து வாங்கித் தைப்பதில் ஈடுபட்டிருந்தன. மனைவியின் விரல்களின் அசைவும், ஊசி நூலைக்கோர்த்துப் பின்னும் தன்மையும் லீயின் எண்ணத்தைக் கிளறியது. அதையே கண்கொட்டாது கவனித்தார். அதன் முடிவாகக் காலுறையை எளிதாகத் தைக்கும் பொறியொன்றைக் கண்டுபிடித்தார்.

தான் கண்டுபிடித்த பொறியை எடுத்துக்கொண்டு லீ லண்டன் மாநகர் சென்றார். அப்பொழுது இங்கிலாந்தை ஆண்டுகொண்டிருந்த எலிசபெத் அரசியார் லீயின் பொறியை நேரிற் கண்டு வியந்து பாராட்டினார்.

லீயின் புகழ் பிறநாட்டிலும் பரவிற்று. பிரான்சு நாட்டு மன்னன் நான்காம் ஹென்றி லீயை வரவழைக்க எண்ணி ஓலையனுப்பினான். அழைப்பை யேற்று பிரான்சு நாடு சேர்ந்த லீ, தான் கண்டுபிடித்த பொறியின் சிறப்பிற்கு பரிசு பெறும் முன்பே இறந்துவிட்டார். ஆனால் அவரது கண்டுபிடிப்பை நாட்டினர் எல்லோரும் பாராட்டி அவரது அறிவியல் திறனைப் போற்றினர்.

---

பலனை அனுபவிப்பதில் வேறுபாடு உண்டாகிறது.

இந்தக் கருத்தை டாக்டர் ஏ. ராமசாமி அவர்கள் கல்லூரியொன்றில் பேசும்பொழுது வெளியிட்டுள்ளார்.

"எல்லா வகுப்பினரிடையேயும் அறிவுத் திறன் ஒரே அளவுதான் இருக்கிறது. சரித்திர பூர்வமான சில காரணங்களால் குறிப்பிட்ட சில வகுப்பினிடை அறிவு மலர காலம் அதிகமாகிறது. பெற்றோர்கள் படித்த அறிவாளிகளாயிருந்தால், பிள்ளைகளுக்கு வீட்டிலும் கல்வியின் பயன் கிடைக்கிறது. இந்த வசதி பிற்பட்ட வகுப்பினரின் பிள்ளைகளுக்குக் கிடைப்பதில்லை" என்று பிற்பட்டவகுப்பினரிடை கல்வி நிலை பந்தமாயிருப்பதன் காரணத்தை விளக்கியுள்ளார்.

திருவாங்கூர் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் டாக்டர் ஏ. ராமசாமி அவர்கள் தந்துள்ள கருத்தை மற்ற கல்வி வல்லுநர்களும், கல்லூரித் தலைவர்களும் கவனித்தல் வேண்டும். பிற்பட்ட வகுப்பினரை கல்வி நிலையிலும், வாழ்க்கைத்தரத்திலும் உயர்த்தும் முகத்தான்தான், வகுப்புவாரி உரிமைகளும், கல்வியில் பிற சலுகைகளும் கேட்கப்படுவதாகும்.

தகுதி-திறமை என்பதை மட்டும் முன்வைத்துக்கொண்டு, மற்றச் சமூகச் சூழ்நிலைகளைக் கவனிக்காமல், கல்வித்துறைச் சட்டதிட்டங்களை வகுப்பவர்களுக்கு, டாக்டர் ஏ. ராமசாமி அவர்களின் ஆய்வுரை தக்க வழிகாட்டியாயிருக்குமென்று நம்புகிறோம்.

# மிகப் பழைய நூல்

உலகில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகமிகப் பழைமையானது எகிப்து நாட்டில் நைல் ஆற்றங்கரையில் தோன்றியதுதான். அந்த நூலை தீப்ஸ் (Thebes) நகரத்தில் ப்ரிஸ்ஸி (Prisse) என்பவர் கண்டுபிடித்தார். அதனைப் ப்ரிஸ்ஸி சுவடி என்று வழங்குவர். பாரிஸ் நகரத்தில் நாட்டு நூல்நிலையத்தில் இந்நூலின் படி இப்பொழுது வைக்கப்பட்டுள்ளது. அந்நூல் கி. மு. 2500-ல் எழுதப்பெற்றது. கி. மு. 3850-ம் ஆண்டில் எழுதப்பட்ட ஒரு மூல நூலின் படியே அந்நூல் என்று கருதப்படுகிறது.

அந்நூலின் பெயர் 'ப்டாஹ்-ஹோட்டெப் (Ptah Hotep) அறிவுரைகள்' என்பதாகும். ப்டாஹ்-ஹோட்டெப் கி. மு. 3850-ல் எகிப்தில் அரசனாக முடிசூட்டப்பெற்றவனாவான். எனவே அந்நூல் இற்றைக்காலத்திலிருந்து ஏறத்தாழ 6000-ம் ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது என்று கொள்ளவேண்டும். அத்துணைப் பழைமையானதாக அந்நூல் இருந்தாலும், அதில் கூறப்பட்டுள்ள அறிவுரைகள், காலத்தால் பழைமையானவையாக ஆகிவிடாமல் எக்காலத்திற்கும் பொருந்தி வருவனவாக அமைந்திருப்பது மிகவும் வியத்தற்குரியதாகும். ப்டாஹ்-ஹோட்டெப் தமது 110-வது ஆண்டில் அந்நூலை எழுதியதாக அவரே சொல்லியுள்ளார். அந்நூலில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளில் சில வருமாறு :

"கல்வியறிவு மிகுதியும் உள்ளோமென்று செருக்குக் கொள்ளாதே. உண்மை அறிவு உடையவர்களைப் போற்றுவாயாக. எளியோரையும் நீ போற்றுவதில் தவறக்கூடாது.

அறிவுக் களஞ்சியத்தின் வாயில் ஒருவனுக்கு அடைத்துப்போகவில்லை. ஆனால், அங்கே யார் போனாலும், அவன் முழுமையை அடைவதற்கு முயன்றால், அது ஒருபொழுதும் அவனுக்கு நிறைவேறிவராது.

மரகதமும் வைரமும் கல்லோடு கல்லாய் மண்ணில் புதையுண்டுக் கிடக்கின்றன. இவற்றின்பொருட்டு அடிமையாட்கள் நிலத்தைத் தோண்டுகிறார்கள். இங்ஙனமே அறிவுரைகளும் வெளிப்படப் புலனாகாது புதையுண்டுதான் கிடக்கும்.

உன்னை எதிர்த்துத் தாக்குபவன் உன்னைக் காட்டிலும் வலிமையுள்ளவனானால், நீ அவனுக்குப் பணிந்துவிடு. அவனோடு சினம் கொள்ளாதே; அவன்மீது கையை நீட்டாதே. இப்படிச் செய்தால், உன்னைத் துன்பம் அணுகமாட்டாது. வலிமைமிகுந்த அவன் பொருந்த முன்னேறுதல் இயற்கை; அவனோடு எதிர்த்துச் சண்டையிடுதல் உனக்கு நன்மையைத் தரமாட்டாது ஆதலால் உன்மீது அவன் சினம்கொள்ளும்போது, நீ அவனோடு பிணங்கிக்கொள்ளாதே. இங்ஙனம் ஒழுகினால், முடிவில் நீ அவனையும் வெற்றிகொள்வாய்.

யாரேனும் உன்னை இகழ்ந்து பழித்தால், அவனுக்கு மறுமொழி கூறாதே. நாவடக்கம் உள்ளவன் இவ்வாறு பழிப்பவனைக் காட்டிலும் மிக்க ஆற்றலுடையவன்.

வேலைக்காரர்களை வைது நோகச் செய்பவன் தானே கீழான நிலைமைக்கு வந்துவிடுவான்.

நீ அறிவுள்ளவனானால், உன் இல்வாழ்க்கையில் நீ கவனமாய் இரு. உன் மனைவியை மதிப்பாய் நடத்து. அவளிடத்தில் ஆழ்ந்த அன்புடையவனாய் இரு. உணவும், உடையும் அவளுக்கு இசைவாய்க் கொடு, இது கணவனுடைய கடமையாகும்.

அவளுக்குத் தைலங்கள், வாசனைப் பொருள்கள் முதலியவற்றை நிரம்பக் கொடு. ஒவ்வொரு நாளும் அவளோடுக் குலாவி அவளை இன்புறுத்தத் தவறாதே. அவளுடைய மன விருப்பத்தையெல்லாம் நிறைவேற்று. ஏனெனில், உண்மையாக மனைவிமீது அன்புகொண்டு அவளைப் பெருமைப்படுத்துபவன் தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கொள்கிறான்.

அவளை அடித்துத் துன்புறுத்தாதே; அவள் மீது கொடுமை உள்ளம் கொள்ளாதே; அவளோடு இனிமையாய்ப் பேசி அவளை உன்வயப்படுத்து. இவ்வாறு நீ செய்வதனால் அவள் பிறர்மீது நாட்டம்கொள்ளாதபடி செய்துவிடுகிறாய். அவளோடு உரையாடு; உன் அன்பு முழுவதையும் அவளுக்குக் கொடு; அவள் உறுதியாக உன்வயப்பட்டிருப்பாள்."

இத்தகைய அறிவுரைகளைத் தாங்கி நிற்கும் அப்பழம்பெரும் நூல் எவ்வளவு வியத்தற்குரியது என்பதை எண்ணிப்பாருங்கள்.

தொடர்கதை

# பனி வெளியில்

இரா. செழியன்

தங்கம் கண்ணை விழித்துப் பார்த்தாள்.

மேலே மாமரத்தின் இளந்தழைகள், அசைந்துகொண்டிருந்தன. அதற்குமேல் அசையாது நீல வானம் பரந்து கிடந்தது. இரண்டு வெண் மேகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக மிதந்து வந்துகொண்டிருந்தன, மெதுவாக, அமைதியுடன்—நீலக்கடலில் மிதந்துவருகிற பாய்மரக் கப்பல்களைப் போல. எங்கே போய்க்கொண்டிருக்கின் [illegible] தாகத் தெரியவில்லை. மேகக்கூட்டங்களுக்குக் கீழே, வட்டமிடுகிற வான்பருந்து எவ்விதக் கஷ்டமுமின்றி, விரித்த சிறகுகளைச் சிறிதுகூட அசைக்காமல் அது சுற்றிக்கொண்டிருந்தது. எவ்வளவு பெருமிதம்! எவ்வளவு உல்லாசம்! அந்தப் பருந்தைப் பார்த்தால், பூமியைச் சேர்ந்த பறவையைப் போல் தோன்றவில்லை. மேக மண்டலத்திலிருந்து கீழிறங்கி உலவுகிற பார்வையாளனைப் போலக் காணப்பட்டது. அந்தப் பருந்துக்குச் சற்று அருகில் ஒரு பட்டம்—வயலோரத்தில் நின்றுகொண்டு, ஒரு மாட்டுக்காரன் தன் ஆசையைச் சதுரக்காகிதமாக்கி மேலே யனுப்பிய பட்டம்—தன் நீண்ட வால் காற்றில் துவள, அசைந்தாடிக்கொண்டிருந்தது.

இளவேனிற் காலத்து மாலைப்பொழுது! வானத்தின் நிறம் சிறிது, சிறிதாக மாறத் தொடங்கியது. மேற்கில் மூழ்குகிற ஞாயிறு, தன் நீண்ட கைகளால் சிவப்பு வண்ணத்தை அள்ளி வீசியபடி இருந்தான். அதனுல் நீல மயமாக இருந்த வானத்தில் செவ்வண்ணம் ஆங்காங்குச் சிதறியது. வெண்மேகங்களின் ஒரு பாதி செம்பஞ்சுபோலாயிற்று. "இருள் வரப் போகிறது, எனவே எல்லோரும் தங்கள் இருப்பிடம் சேர்மின்!" என்று அபாய அறிவிப்புப் போலச் சிகப்பு ஒளி வந்ததும், பறவைகளெல்லாம் தமது கூடுகளை நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. வட்டமிடும் வான்பருந்தும் தாழ்ந்துப் பறந்தது; சத்தமிடும் சிட்டு மாந்தளிரில் ஊஞ்சலாடியது; கூவும் குயில், தாவும் செம்புள், ஓடிவரும் மணிப்புரு, அதனைத் தேடிவரும் மாடப்புரு—அந்தத் தோட்டத்தில் சத்தம் அதிகமானது. தவழ்ந்துவரும் தென்றற் காற்று, பந்தலில் படர்ந்திருந்த முல்லைக் கொடியிலிருந்து ஒரு மலரைப் பறித்தது, ஆனுல் அதன் மணத்தையும் கனத்தையும் தாங்கமுடியாமல், கீழே போட்டுவிட்டுச் சென் [illegible] தங்கம் [illegible] தங்கம் அதை எடுத்து, மணம் நுகர்ந்தாள். மறுபடியும் கண்ணை மூடிக்கொண்டு, தலையை ஒரு புறம் சாய்த்துக்கொண்டாள்.

தங்கத்திற்கு வாழ்க்கையில் எதுவும் தானுகச், சுலபத்தில் கிடைத்ததில்லை. ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு தடை, ஒரு கஷ்டம் வந்தபடிதான் இருந்தன. ஆதலால் அருகில் விழுகிற சிறு மலர்கூட அவளுக்கு அதிக மகிழ்ச்சியையும், மணத்தையும் அளித்தது.

தங்கத்திற்கு ஆறு வயதாகும்பொழுது, நோய்வாய்ப்பட்டிருந்த அவளுடைய தாய் இறந்துவிட்டாள். அம்மாவைப்பற்றி நினைக்கும் பொழுதெல்லாம் கூடத்தில் போடப்பட்டிருக்கும் கட்டில், அதற்கருகில் அடுக்கப்பட்டிருக்கும் மருந்து புட்டிகள் ஓரத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிறிய அடுப்பு, நீலக் கம்பிளி இவைகள் ஞாபகத்திற்கு வரும். டாக்டர் வாரத்திற்கு ஒரு முறை—அல்லது நோய் அதிகமாக இருக்கிறதென்றுல் இரண்டுதடவை வந்து பார்த்துவிட்டுப்போவார். டாக்டர் வருகிருரென்றுல், வீட்டில் உள்ளவர்கள் உடனே பரபரப்புடன் எல்லாவற்றையும் ஒழுங்காக வைத்துக்கொண்டு, காத்துக்கொண்டிருப்பார்கள். டாக்டர் நோயாளியைப் பார்க்கும்பொழுது; எல்லோருக்கும் முன்னதாகத் தங்கம்தான் கட்டிலுக்குப் பக்கத்தில் நிற்பாள். டாக்டர் தெர்மாமீட்டரை எடுத்து உதறுவது, சரிபார்த்து வைப்பது, நாடிபார்ப்பது, அவர் கொண்டுவருகிற

மருந்துப்பெட்டி, மாட்டிக்கொண்டிருக்கிற ஸ்டெதாஸ்கோப் எல்லாம் அவள் கருத்தைக் கவர்ந்தன. அவளுடைய அப்பா பார்த்துவந்த போஸ்ட்மாஸ்டர் உத்தியோகத்துக்கு அடுத்த படியாக, டாக்டர் வேலைதான் பெரிய வேலையாக அவளுக்குப் பட்டது.

ஆனாலும், எந்த டாக்டர்களை வைத்துப் பார்த்தபோதிலும் தங்கத்தின் தாய் பிழைக்கவில்லை. திடீரென்று ஒரு நாள் இரவு நோய் கடுமையாகி, மறுநாள் காலை இறந்துவிட்டாள். தங்கம் ஆறுவயதுச் சிறுமியானதால் என்ன நடந்ததென்று புரியவில்லை. மற்றவர்களெல்லாம் அழுவது அவளையும் அழச் செய்தது. வீட்டை விட்டுச் சென்ற அம்மா இனித் திரும்பமாட்டார்கள் — இறந்துவிட்டார்கள் என்பது நீண்டநாட்கள் கழித்துதான் தங்கத்திற்குத் தெரியவந்தது; உணரமுடிந்தது.

தங்கத்தின் தாய் இறந்ததற்கு அவளை வாட்டிய நோய் மட்டுமல்ல, அவள் பெற்றெடுத்த மகளும் ஒரு காரணம் என்று வீட்டிலும் ஊரிலும் பேசிக்கொண்டார்கள். தங்கத்தின் ஜாதகம் கிரகதோஷமுள்ளதாம், அதன்படி அம்மா உயிருக்கு ஆபத்தாம். அதனால்தான் தாய் இறந்தாள் என்று சொன்னார்கள், சொல்வது மட்டுமல்ல தங்கத்தைப் பற்றிய பேச்சு வரும்பொழுதெல்லாம் அதை ஒரு முக்கிய குணாதிசயமாகக் குறிப்பிடப்பட்டது.

“தங்கம், தங்கமான பெண்!”

“ஆமாம்! அதனால்தான் தாயைச் சாகடித்தது. இந்தப் பெண்ணுடைய ஜாதகதோஷத்தால்தான் அவள் அம்மா செத்தாள்.”

“அப்படியென்றால்?”

“இவள் பிறக்கவில்லை யென்றால், அவள் அம்மாவும் செத்திருக்கமாட்டாள்.”

இப்படியெல்லாம் கேட்கும்பொழுது சிறுமி தங்கம் என்ன செய்வாள், பாவம்! தனது பிறப்பே துன்பத்தை உண்டாக்கியது என்ற செய்தி அவள் இளம் உள்ளத்தை துன்பமயமாக்கியது. அதிலும் தன்னுடைய அம்மாவை சாகடிக்க இருந்தாள்! வேதனை தாளாமல், தன்மீது வீசப்படும் பழிச்சொல் தாளாமல், அவள் அடிக்கடி அழுதுவிடுவாள், தன் சிறு கன்னங்களில் கண்ணீர் புரள.

அதிலும் அம்மா செத்ததும், குடும்பகாரியங்களைக் கவனிக்க வந்த அவளுடைய அத்தை அஞ்சலையம்மாள் கடுஞ்சொற்களால் தங்கத்தை அடிக்கடி கொட்டிவந்தாள். தாழ்வாரத்தில் இருக்கும் சிறு செம்பை தங்கம் காலிடறி உருட்டிவிட்டால் போதும். உடனே கோபக் கனல் வீச அத்தை கிளம்பிவிடுவாள். “பெற்ற தாயை உருட்டிவிட்ட தறுதலை! இன்னும் வீட்டிலிருக்கிற சாமானையெல்லாம் உருட்டிவிட்டு, இருக்கிறவங்களையெல்லாம் உருட்டிவிட்டால்தான் நீ உட்காருவாய்!” என்று வசை தொடுக்க ஆரம்பிப்பாள். தங்கம் அப்படியே நடுங்கிக், குன்றிப்போய் நிற்பாள்.

அத்தையின் மேர்பார்வையின்கீழ் தங்கம் பட்ட கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. அடி, உதை எல்லாம் கணக்கு வழக்கின்றி கிடைக்கும். அப்பா காலையில் கிளம்பி போஸ்டாபிசுக்குள் போனால், மாலை வேலை முடிந்ததும், எங்கேயாவது உட்கார்ந்து சீட்டாடிவிட்டு இரவு ஒன்பது, பத்துமணிக்குமேல்தான் வருவார். மனைவி இறந்ததிலிருந்து, அவர் எதிலும் ஊக்கம் காட்டாமல் இருந்தார். காலையில் மகள் படிக்கும்பொழுது, பக்கத்தில் உட்கார்ந்து பேப்பர் பார்த்துக்கொண்டிருப்பார். பின், மூக்குக்கண்ணாடியை கழற்றி மேஜைமேல் வைத்துவிட்டு, பேசாமல் ஜன்னல் கம்பிகளைப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பார். அந்தச் சமயங்களில் தங்கம் ஏதாவது கேட்டாலும் காதில் விழாது. சிறிது நேரம் கழித்து, “என்னம்மா வேண்டும்?” என்று கேட்பார். “ஒன்றுமில்லையப்பா?” என்று தங்கம் போய்விடுவாள்.

வீட்டில் இருக்கும் வேதனையில், பள்ளிக்கூடத்துக்குப் போவது தங்கத்திற்கு விடுதலையாக இருந்தது. அத்தையின் வசவுகளையும், மரியாதைகளையும் பெறும்பொழுது, விடுமுறை நாட்களில்கூட பள்ளிக்கூடம் இருந்தால் நல்லது என்று அவளுக்குத் தோன்றும், அதனால் பள்ளிக்கூடத்திற்குப் போவதில் அவளுக்குத் தனி உற்சாகம் ஏற்பட்டது. சிறுகச் சிறுக கல்வி கற்பதில் ஆர்வமும், திறமையும் அவளுக்கு உண்டாயின.

அத்தை அஞ்சலையம்மாளின் கொடுமைகளுக்கு தங்கம் மட்டுமல்ல, அஞ்சலையின் தங்கை மகனான குலசேகரனும் ஆளாயினான். தங்கத்திற்குக் கிடைக்கும் அளவு குலசேகரனுக்குக் கிடைக்காவிட்டாலும், அவ்வப்

பொழுது "அத்தை ஒருத்தி இருக்கிறாள்!" என்று அச்சம் அடிக்கடி வலியுறுத்தப்பட்டது. கொடுமைப்பட்டவர்களிடை, ஒரு ஒற்றுமை உண்டாவது இயல்பல்லவா! ஆதலால் அத்தையிடம் கொடுமைப்பட்ட இருவரும், மிக ஒற்றுமையுடன் இருந்தார்கள். வீட்டிலும், பள்ளிக்கூடத்திலும், விளையாட்டிலும் இருவரும் ஒருவருக்கொருவர் துணையாக இருப்பார்கள். அதிலும், யாராவது ஒருவர் செய்த தவறை அத்தையிடமிருந்து மறைத்துவிடுவதில் இருவரும் சாமர்த்தியக்காரர்கள்.

தங்கம் எட்டாவது வகுப்புப் படிக்கும் பொழுது, அவளுடைய அப்பா திருச்சிக்கு மாற்றிக்கொண்டு போனார். குலசேகரன் அப்பொழுது பத்தாவதுக்குத் தேறியிருந்தான். அத்தை அவனையழைத்துக்கொண்டு சென்னைக்குச் சென்றுவிட்டாள். அத்தையிடமிருந்து விடுபட்ட தங்கத்துக்கு ஒறுவாறு நிம்மதி கிடைத்தது.

கல்லூரியில் இரண்டாவது வகுப்பு வரை தங்கம் திருச்சியில் படித்தாள். பின் அவளை வைத்தியக் கல்லூரியில் சேர்ப்பதற்காக, அவளுடைய அப்பா வேலூருக்கு மாற்றிக்கொண்டார். அவளைப் படிக்கவைப்பதற்காக அவளுடைய தந்தை மிகவும் பாடுபட்டார். ஆனால் அவள் படித்து ஒரு டாக்டராக வெளிவருவதை அவர் பார்க்கவில்லை. அவளுடைய கடைசி ஆண்டின்போது, அவர் திடீரென்று மாரடைப்பினால் இறந்துவிட்டார்.

அப்பா இறந்ததும், அத்தை மீண்டும் தங்கத்தைக் கண்காணிக்க வந்து சேர்ந்துவிட்டாள். தங்கம் முன்போலச் சிறுமியல்ல, ஆதலால் அத்தையின் அதிகாரம் அதிகமாகச் செல்லவில்லை. ஒருவர் விஷயத்தில் மற்றவர் குறுக்கிடாமல் இருந்தனர். சமாதானம் ஒரு வகையில் பாதுகாக்கப்பட்டது. ஆனால் ஒருநாள் மோதுதல் ஏற்பட்டது, மிகப் பலமாக. அதுவும் தங்கத்தின் திருமண விஷயத்தில்.

"தங்கம்! உன் கல்யாணத்தை இந்த வருஷத்தில் முடித்துவிடலாமா?" என்று அத்தை ஆரம்பித்தாள்.

தங்கத்துக்குக் கோபம் வந்தது. ஏதோ முடிவு செய்து, அத்தை தரும் தீர்ப்பாக அது இருந்தது. "அதைப்பற்றி நீங்கள் ஒன்றும் கவலைப்படவேண்டாம்." என்று சட்டென்று பதில் தந்தாள்.

"துடுக்குத்தனமாகப் பேசாதே! படித்த பெண்ணென்றால் பதட்டம் கூடாது! உன் அப்பாவுக்குப் பிறகு நான்தானே உன்னைக் கவனிக்கணும்."

"சரி அத்தை! இனிமேல் இந்தப் பேச்சை எடுக்கவேண்டாம்!" என்று தங்கம் கண்டிப்பாகச் சொன்னாள்.

தங்கத்தின் கண்டிப்பைப் பார்த்ததும், அத்தை நயந்து பேசினாள். "எல்லாம் உனக்காகத்தான் சொன்னேன்! அவனும் படித்து முடித்து நல்லபடியாக இருக்கிறான்."

அந்த 'அவன்' என்பது யாரென்று தங்கத்திற்குத் தெரியவில்லை. அத்தையால் சிபாரிசு செய்யப்படும் குணாளன் யாராக இருக்கக்கூடும் என்று யோசித்தாள்.

"தங்கை அமிர்தம் வந்தபொழுதுகூட கேட்டேன். சரியென்று சொல்லிவிட்டாள்" என்று அஞ்சலையம்மாள் தெரிவித்தாள்.

"யாரது? சேகரனையா?"

"ஆமாம், அவனைத்தான்!"

அத்தை சொல்வது, தங்கத்துடன் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த, சின்னத்தை மகன் குலசேகரனை. தங்கத்திற்குச் சிரிப்பு வந்தது. சிறு வயதில் பிரிந்தபிறகு, அவனை அவள் பார்க்கவேயில்லை. அவள் மனக்கண்ணில், புத்தகப்பையைத் தோளில் மாட்டிக்கொண்டு, ஒருபக்கம் தலையைச் சாய்த்துக்கொண்டு வரும் பள்ளிச் சிறுவனாகவே அவன் இன்றும் காணப்பட்டான். ஆதலால் அவனைப்பற்றிச் சொன்னபொழுது அவளுக்குச் சிரிப்பு வந்தது.

தங்கம் சிரித்தது அத்தை அஞ்சலைக்குப் பிடிக்கவில்லை, "ஏன் அவனுக்கென்ன குறைவாம்! வக்கீல் வேலைக்குப் படித்து, இப்பொழுது கோயம்பத்தூரில் இருக்கிறான். அவனை வரச்சொல்லிக் கடிதம் எழுதவேண்டும்."

"எழுதலாம். நான்கூட பார்க்கவேண்டும். ஆனால் கல்யாணப் பேச்சை எடுக்கக்கூடாது."

"ஏன் இப்படிப் பிடிவாதமாக வேண்டாமென்கிறாய்? கல்யாணமே செய்துகொள்ளப் போவதில்லையா?"

"அப்படியொன்றும் சொல்லவில்லையே!"

"பின் ஏன் வேண்டாமென்கிறாய்?"

தங்கத்திற்குப் பேச்சை வளர்த்தப் பிரியமில்லை. ஆதலால் வெளியில் போகக் கிளம்பினாள்.

"எங்கே போகிறாய்?" என்று அத்தை கேட்டாள்.

"எங்கேயாவது?"

"எதிர் வீட்டுக்குத்தானே?"

"ஆமாம்! அந்த வீட்டு ஐயாவுக்கு உடம்பு எப்படியிருக்கிறதென்று பார்க்க!"

"அவருக்கு ஒருநாள் காய்ச்சல் என்றதும், நீ ஒன்பதுதடவை அங்கு போகிறதும், எல்லாம் எனக்குத் தெரியும். அவருடைய பிள்ளை பட்டணத்திலிருந்து வந்திருக்கிறான் அவனிடம் பல்லிளித்துப் பேசிவரத்தான் நீ போகிறாய், எனக்குத் தெரியும்."

"ஆமாம், அதற்கு என்னவாம்?"

"என்னவா? கண்டவர்களோடே கலகலப்பாகப் பேசிக்கொண்டு......."

தங்கத்திற்குக் கோபம் வந்ததும். "சரியத்தை! அவரோடு பேசினால் என்ன தப்பு!"

"அதற்கு அவனையே கட்டிக்கொண்டு போவதுதானே!"

"அப்படித்தான் ஆகப்போகிறது."

"என்ன, என்ன? என்னைப் பார்த்துச் சொல்லு, ஊர் பேர் தெரியாத அவனையா?"

"ஊர் பேர் தெரியாமல் இல்லை. அவருக்கு ஊர் இந்த வேலூர்தான். பெயர் கமலநாதன். போதுமா?" என்று ஆத்திரத்துடன் சொல்லிவிட்டுத் தங்கம் வெளிவந்தாள்.

வேலூரில் தங்கம் குடியிருந்ததற்கு, எதிர் வீட்டில் இருந்தவர் காந்திமதிநாதம் பிள்ளை என்பவர். அவர் பெரிய பணக்காரர் என்பதை அவருடைய மாடி வீடும், அதைச் சுற்றியிருந்த பெரிய தோட்டமுமே சொல்லும். மாலை நேரங்களில் சில சமயம், தங்கத்தின் தந்தை அங்குபோய் காந்திமதிநாதம் பிள்ளையுடன் பேசிக்கொண்டிருப்பார், சீட்டாடுவார், உருப்படியில்லாத திட்டங்களைப் போட்டுக்கொண்டிருப்பார்கள். தங்கத்தின் அப்பா இறந்தபோதும், அவர்தான் உடனே வந்து, எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டார். ஆனால் அவருக்கும் வயதாகிவிட்டபடியால், ஒருமுறை காய்ச்சல் வந்து படுக்கையானார். அப்பொழுது அவரைப் பார்க்கப் போனபொழுதுதான், அவருடைய மகன் கமலநாதனை தங்கம் சந்தித்தாள். கமலநாதன் சென்னையில் ஒரு பெயர்பெற்ற வழக்கறிஞரிடம் பழகி, அப்பொழுது அரசாங்க வழக்கறிஞராகப் பதவியேற்றிருந்தான். தந்தைக்கு உடல் நலமில்லாத செய்தி கேட்டு, வீட்டுக்கு வந்தபொழுது தங்கத்தைச் சந்தித்தான்.

வாழ்க்கையில் ஒவ்வொரு சமயத்திலும், கஷ்டப்பட்டு, போராடி, தடைகளை மீறித் தங்கம் முன்னேறவேண்டியிருந்தது. அவளுடைய தாய் இறந்ததிலிருந்து, கடைசியாகப் படிக்கது முடிக்கும் வரையிலும் ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவது குறுக்கீடுகள் வந்தவண்ணமேயிருந்தது. தாயின் பிரிவு, தந்தையின் சோர்வு, அத்தையின் கொடுமை அவ்வப்பொழுது ஏழ்மை தரும் இடையூறுகள் இவைகளையெல்லாம் தாங்கிக்கொண்டுதான், தங்கம் வாழ்க்கைப் பாதையில் நடந்துசெல்லவேண்டியிருந்தது. கமலநாதனுக்கு அப்படியில்லை. பிறந்ததிலிருந்தே எல்லாம் அவனுக்குத் தயாராக வைக்கப்பட்டிருந்தன. சரிவோ மேடோ, காலைத் தட்டும் கரடுமுரடோ, எதுவும் அவன் பாதையில் காணப்படவில்லை. பரந்த புல்வெளியில், பாத்திகள் ஒதுக்கப்பட்டு, பாதை செப்பனிடப்பட்டத் தோட்டத்தில் உலவிவருவதுபோலிருந்தது அவனுடைய வாழ்க்கை. அவன் எதற்கும் கஷ்டப்பட்டதுமில்லை, கவலைப்பட்டதுமில்லை. அவனுடைய அப்பாவின் செல்வமும் செல்வாக்கும் அவனுக்குப் பாதுகாப்பு அளித்தன.

கமலநாதனின் உறுதியான பேச்சும்—எதிலும் அவனுக்குத் தடுமாற்றமோ, தயக்கமோ தோன்றுவதில்லை—கவலையற்ற போக்கும் தங்கத்திற்கு ஆச்சரியமாகவும் புதுமையாகவும் இருந்தது.

தொடர்ச்சி. உ36. பார்க்க

(தொடரும்)

'மன்றம்' சந்தா விபரம்

| | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | 6—0—0 | 7—8—0 |
| ஆறு திங்கள் ,, | 3—0—0 | |
| தனி இதழ் ,, | 0—4—0 | 0—5—0 |

# அண்டசராசரம் - 3

[இரா. செழியன்]

[அண்டசராசரங்களையெல்லாம் பிரமதேவன் படைத்தானாம். இவ்வளவு பெரிய பிரமாண்ட படைப்புக்கு ஆதாரமாக—அஸ்திவாரமாக ஆமை வைக்கப்பட்டது. ஆமை முதுகின்மேல் அஷ்ட திக்கு யானைகளும், ஆயிரந்தலையுடைய ஆதி சேடனும் இருக்கின்றன. அவைகளுக்குமேல், உயிர்களை உண்டாக்குவதில் பிரமனுக்கு உதவியாக இருக்கும் ருத்ரர்களின் ருத்ரபுவனம் இருக்கிறது. ருத்ர புவனத்துக்குமேல் புகைமண்டலம். புகைமண்டலத்துக்குமேல் வெட்டவெளி. அவற்றுக்குமேல் யமனுடைய பட்டணங்கள், அவனால் நிர்வகிக்கப்படுகிற நரக லோகங்கள்...]

## நரகலோகம்

உலகத்தில் பாபஞ் செய்கிறவர்களைத் தண்டிப்பதற்காகப் பிரமதேவன் உண்டாக்கிய இடம் நரகலோகம். எவை எவை குற்றமென்பதற்குச் சட்ட புத்தகம் விளக்கங்கூறுவது போல, எவையெவை பாபம் என்பதற்கு வேத புராணங்கள் ஆதாரமாக உள்ளன. குற்றத்துக்குச் தகுந்தவாறு தண்டனை தரப்படுவதுபோல, பாபத்துக்குத் தகுந்தவாறு நரகங்கள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

நரகலோகத்தில், ஒன்று இரண்டல்ல, 28 கோடி நரகங்கள் இருக்கின்றன. பெரும்பகுதியாகப் பார்த்தால், நரகலோகம் 28 வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஒவ்வொரு வகைக்கும் ஒருகோடி உட்பிரிவுகள் இருக்கின்றன. அந்த 28 வகை நரகங்களும் அவற்றின் இயல்புகளும் கீழே தரப்பட்டிருக்கின்றன.

(1) வைதரணி : வேதபுராணங்களில் சொல்லப்பட்ட தாமங்களைச் செய்யாதவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இங்கு சீழ், இரத்தம் போன்றவை அருவருக்கத்தக்க துர்நாற்றமுடையனவாய் நிரம்பிக் கிடக்கும். அதில் விழுந்தவர்களைப் பயங்கரப் புழுக்கள் சுற்றி அரித்துக்கொண்டேயிருக்கும்.

(2) பூயோதம் : சாஸ்திர சம்பிரதாயங்களைப் பின்பற்றாதவர்கள், ஆசார அனுஷ்டானங்களின் படி நடக்காதவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்படுவார்கள். இந்த நரகம் மலம், மூத்திரம் போன்ற கழிவுப் பொருள்களால் நிரம்பியிருக்கும்.

(3) சூசிமுகம் : ஏராளமான செல்வத்தைப் பெற்றிருந்தும், அதனை வேத புராணங்களில் சொல்லப்பட்ட தர்ம காரியங்களில் செலவிடாமல் சேர்த்துவைத்துக் கர்வத்துடன்இருப்பவர்கள் இந்த நரகத்தில் கஷ்டப்படுவார்கள். ஊசி முகம்போன்ற முட்களால் தொளைக்கப்பட்டு வருத்தப்படுவார்கள்.

(4) அசிபத்ரவனம் : புராணங்களில் கூறுகிற தெய்வங்களை நம்பாது போகிறவன் இந்த நரகத்தில். வாள்போன்ற இலைகளையுடைய மரங்களின்மீது எறியப்பட்டு, இடர்ப்படுவான்.

(5) பன்றிமுகம் : வேதங்களில் இடப்பட்ட கட்டளைக்கு மீறி, தனது வருணத்துக்கு அப்பாற்பட்ட சிட்சை செய்பவர்கள் இந்த நரகத்தில் கொடுமை செய்யப்படுவார்கள்.

(6) அந்தகூபம் : தனது நாட்டுக்கோ, மதத்துக்கோ, குலத்துக்கோ, தர்மத்துக்கோ துரோகம் செய்பவர்களும், கொலை செய்பவர்களும் இந்த நரகத்தில் அவதிப்படுவார்கள். இங்கு பல விஷப்பிராணிகளால் கொட்டப்பட்டு, கண்பார்வை யிழந்து உயிர் கஷ்டப்படும்.

(7) கிருமிபோஜனம் : வேத புராணங்களில் கூறப்பட்ட நியதிகளின்படி தெய்வபூசை செய்யாதவர்கள் இந்த நரகத்தில் புழுக்களாய் மாறித் துடிப்பார்கள். அந்தச் சிறு புழுக்களை,

அங்கு இருக்கும் பெரும் புழுக்கள் தின்று விடும்.

(8) தாமிச்ரம் : பிறர் பொருளேயோ, மனேவியரையோ கவர்ந்தவர்கள் இந்த நரகத்தில் தள்ளப்பட்டு, மூர்ச்சையாகிக் கிடப்பார்கள்.

(9) அந்ததாமிச்ரம் : இதற்கு முன் சொன்ன தாமிச்ரத்தைவிட அதிகமான [illegible] தரும் நரகம். இந்த நரகத்தில் பிறர் மனேவியை வஞ்சித்தவர்கள் கண்ணிழந்து துன்பப்படுவார்கள்.

(10) ரௌரவம் : பிறன் பொருளே வஞ்சித்தவர்கள் தள்ளப்படும் நரகம். இங்கு ருரு என்னும் கொடிய மிருகங்கள் உயிர்களேத் துன்புறுத்தும்.

(11) மகாரௌரவம் : ரௌரவத்தில் மேற்பிரிவு. ரௌரவத்தைப்போலவே இங்கு ருரு என்னும் மிருகங்கள் இருப்பதுடன், தாங்க முடியாத அக்நி சுவாலே வீசிக்கொண்டிருக்கும்.

(12) கும்பிபாகம் : பிறவுயிரைக் கொன்று தின்றவனே நெருப்பில் தள்ளப்படும் இடம்.

(13) காலசூத்திரம் : தாய் தந்தையரின் மனம் நோக நடந்தவர்கள், பெரியவர்களுக்குக் கீழ்ப்படியாமல் இருப்பவர்கள் இந்த நரகத்தில் சூரியனேப் போன்ற அதிக உஷ்ணத்தால் சுடப்படுவார்கள்.

(14) அக்னிகுண்டம் பிறர்க்குரிய பொருளே வலிவாக எடுத்துக்கொள்பவன் அடையும் நரகம். காய்ச்சப்பட்ட இருப்புச் சாலில் தள்ளப்படுவான்.

(15) சான்மலி : சாதியிலிருக்கும் உயர்வு, தாழ்வு பார்க்காமல், மற்றொரு சாதியைச் சேர்ந்தவளே மணம் பெறுபவன் இந்த நரகத்தில் நெருப்பில் காய்ச்சிய இரும்பு முட்களின் மேல் தள்ளப்படுவான்.

(16) வச்ரகண்டம் : சாஸ்திர சம்பிரதாயங்களாலும், பழக்கவழக்கங்களாலும், வயதாலும், முறையாலும் ஒதுக்கப்பட்ட ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பினல், இந்த நரகத்தில் பழுக்கக் காய்ச்சப்பட்ட இரும்புக் கம்பத்தை அணேயவேண்டியிருக்கும்.

(17) பிராணரோதம் : பிராணிகளேத் துன்பப்படுத்துபவன், இங்கு யமபடர்களால் துன்புறுத்தப்படுவான்.

(18) வைசசி : வெறும் கர்வத்துடன், யாகாதி காரியங்களேச் செய்பவன் இந்த நரகத்தில் யமபடர்களால் சாட்டையடி தரப்படுவான்.

(19) லாலாபட்சம் : தன் மனேவியைக் களிப்பால் தீய காரியத்துக்கு உட்படச் செய்பவன் அடையும் நரகம்

(20) சாரமேயாதனம் : அரசாங்கத்தை எதிர்ப்பவர்கள், விஷத்தைக் கொடுப்பவர்கள், வீட்டில் தீவைப்பவர்கள், இந்த நரகத்தில் தள்ளப்பட்டு, 700 நாய்களால் கடித்துத் துன்புறுத்தப்படுவார்கள்.

(21) அவீசி : பாவ புத்தியுடையவர்கள் இந்த நரகத்தில் ஒரு உயர்ந்த மலேயிலிருந்து தள்ளப்பட்டு, உயிர் துடிக்க, வருத்தப்படுவார்கள்.

(22) பரிபாதனம் : போதை வஸ்துக்களேச் சாப்பிடுபவர்கள், இந்த நரகத்தில் கஷ்டப்படுவார்கள்.

(23) க்ஷாரகர்த்தமம் : தான் செய்யும் நல்ல காரியங்களேப்பற்றி அடிக்கடி சொல்லிக்காட்டுபவன் அடையும் நரகம்.

(24) ரட்சோகணம் : நரமாமிசம் புசித்தவர்கள் அடையும் நரகம்.

(25) தந்தசூகம் : வேதங்களில் விலக்கப்பட்ட பாபாதிகாரியங்களேச் செய்தவர்கள், விஷப் பிராணிகளாலும், பல முகங்களேயுடைய பிராணிகளாலும் வருத்தப்படும் நரகம்.

(26) சூலப்ரோதம் : உபகாரம் செய்யாதவர்கள், சொன்னதை நம்பிக்கையுடன் நிறைவேற்றாதவர்கள் அடையும் நரகம். அவர்கள் சூலத்தில் கோர்க்கப்பட்டு, கழுகு முதலிய பறவைகளால் கொத்தப்படுவார்கள்.

(27) வாடாரோகம் : புண்ணிய மலேகளிலும், மரங்களிலும் வசிக்கும் மிருக, பட்சிகளே வருத்துபவர்கள் இந்த நரகத்தில் மலேயிலிருந்தும், மரத்திலிருந்தும் தள்ளப்படுவார்கள்.

(28) பிரியாவர்த்தனகம் : அதிதிகளேப் பூசிக்காதவன் அடையும் நரகம்.

இவ்வாறு 28 வகையும், ஒவ்வொன்றிலும் ஒருகோடி நரகங்களிருக்க, மொத்தம் 28 கோடி நரகங்கள் இருக்கின்றன.

பார்த்தீர்களா! வேத புராணங்களில் இடப் படும் தர்மங்களைச் செய்யாதவர்கள், சாஸ்திர சம்பிரதாயங்களைப் பின்பற்றுதவர்கள், பெற்ற செல்வத்தை யாகாதி காரியங்களில் செலவிடா தவர்கள், புராணங்களில் சொல்லப்படுகிற தெய்வங்களை நம்பாதவர்கள், வேதங்களில் சொல்லப்பட்ட குலத்தொழிலைச் செய்யாதவர் கள், வேதாகம நியதிகளின்படித் தெய்வ பூசை செய்யாதவர்கள், சாதி உயர்வு தாழ்வு பார்க்கா மல் திருமணம் செய்துகொள்பவர்கள், அதிதி களைப் பூசியாதவர்கள் இவர்களையெல்லாம் தண்டிக்க ஒவ்வொருவகையிலும் ஒருகோடி நரகங்கள் கட்டப்பட்டுள்ளன, பாகவத புரா ணங்களில்! வேத புராணங்களில் சொல்லப் பட்டவைகளை நம்பாமல் இருந்தால் என் னென்ன நேரிடும் என்று பயமுறுத்துவதற் காகப், பத்துப், பதினேரு கோடி நரகங்களை வேதியர்கள் ஒதுக்கிவைத்துவிட்டார்கள். மற்ற நரகங்கள் கள்ளுண்ணல், சோரம்போதல், கற்பழித்தல், பொய் சொல்லுதல், உறவு முறை பார்க்காமல் கையைப்பிடித்தல் போன்றவை களுக்காக இருக்கின்றன. புராணக்கதைகளைப் பார்த்தால், மூவரும் தேவரும் எல்லோரும் இந்தக் குற்றங்களில் ஒன்றுகூடப் பாக்கி வைக்காமல் செய்திருக்கிறார்கள். தாருகா வனத்து ரிஷிபத்தினிகளைக் கற்பழித்த சிவன், ஜலச்சந்திரனின் மனைவியை மாறுவேடம் பூண்டு கற்பழித்த விஷ்ணு, மகளையே மஞ்சத் திற்கு இட்டுச் சென்ற பிரமதேவன், அயலார் மனைவி அகலிகையை நாடிய இந்திரன், குரு பத்தினியை மருவிய சந்திரன், தங்கையைத் தழுவ முயன்ற யமன் இவர்களுக்கெல்லாம் மேற்கூறிய பாவங்களின் பட்டியலைப் பார்த்தால். குறைந்தது நாலைந்து நரகங்களிலாவது சரி யான தண்டனை கிடைத்திருக்கவேண்டும். ஆனால் அவர்களெல்லாம் நரகத்திலில்லை. மேலுலகங்களில் இருக்கிறார்கள். நரகலோகங் கள் மற்றவர்களைப் பயமுறுத்துவதற்காக எழுதிவைக்கப்பட்ட இடங்களாயின.

இனி மேற்கொண்டு, நான்முகன் படைத்த அண்டங்களின் அமைப்பைப் பார்க்கலாம். மேலே சொன்ன 28 கோடி நரகங்களின்மேல், 30 லட்சம் மைல் உயரம் வெட்டவெளியாக இருக்கிறது. இதற்குமேல் 9 கோடி மைல் நீளமுள்ள பூமியுண்டு. இதில் மேற்குப்புறம் இரும்பினால் ஆக்கப்பட்டிருக்கும், கிழக்குப்புறம் பொன்னால் ஆக்கப்பட்டிருக்கும். இந்த பூமியில் நரகங்களின் அதிபனான யமனும், அவனுக்கும் தலைவரான கூஷ்மாண்டர் என்பவரும் இருக் கிறார்கள். இந்த அண்டம் (உலகம்) கூஷ் மாண்ட புவனம் என்றும் பெயர்பெறும். யம புரம்: நரகங்களின் அதிபனாய், உயிர்களின் பாவ புண்ணியங்களைச் சீர்தூக்கிப் பார்த்து நரகத்துக்கும் சொர்க்கத்துக்கும் பிரித்தனுப் பும் வேலையைப் பார்க்க யமன் நான்முகனால் தேர்ந்தெடுக்கப்பட்டவன். இவனுடைய பட் டணம் 10,000 மைல் நீள, அகலமுள்ளதாம். அதன் உயரம் 2500 மைல் இருக்குமாம். அவ னுடைய அரண்மனை நன்றாக அலங்கரிக்கப் பட்டு, எங்கு பார்த்தாலும் பொன்னும் மணி யும் செறிந்திருக்கும். அந்த மண்டபங்களில் தூண்கள் முழு வைரத்தால் செதுக்கப்பட் டவை. மந்தமாருதம் எப்பொழுதும் வீசிக் கொண்டேயிருக்கும். யமனுடைய ஆஸ்தான மண்டபத்தில் ரம்பையர்கள் எப்பொழுதும் ஆடிப்பாடிக்கொண்டேயிருப்பார்கள். அந்த மண்டபத்தின் ஒருபுறத்தில் யமதூதர்கள் கை கட்டி நிற்பார்கள். மற்றொரு பக்கத்தில் ரோகங்கள் எல்லாம் கோர உருவத்துடன் யம னுடைய கட்டளைக்குக் காத்துக்கொண்டிருக் கும். மண்டபத்துக்குப்பக்கத்தில், யமனுடைய கணக்குமந்திரி சித்ரகுப்தன் ஜீவர்கள் செய்கிற பாவபுண்ணியங்களை எழுதிக்கொண்டேயிருப் பான்.

## அக்கிரமத் தண்டனை!

உலகத்தில் ஒரு உயிர் இறந்ததும், யமதூதர் கள் அந்த உயிரைக்கொண்டுபோய் யமதர்பாரில் நிறுத்துவார்கள். உடனே சித்ரகுப்தன் கணக் குப் புத்தகத்தைப் புரட்டிப், பாவ புண்ணியங் களை ஒப்பிப்பான். அதைக்கேட்டு யமன் தன் னுடைய தீர்ப்பைத் தருவான். அவனுடைய தீர்ப்பில் பிசகே இருக்காதாம். ஏனென்றால் யமனுடைய தலைக்குமேல் ஒரு பெரிய மலை மயிரிழையால் கட்டப்பட்டு தொங்கிக்கொண் டிருக்கிறதாம். யமன் தீர்ப்பில் ஏதாவது தவறு செய்துவிட்டால் உடனே பட்டென்று மயிர் அறுந்து மலை விழுந்துவிடுமாம். இவ்வளவுக் கும் அந்த மகாநியாயவாதி யமன் யாரென்றால், தனது உடன் பிறந்த தங்கை யமுனையைத் தழுவ, காமவெறிகொண்டலைந்த ஒழுக்கசீலர்!

அவர் செய்கிற எண்ணத்தில், தீர்ப்பில் சிறிது கூடப் பிசகாதாம்!

யமனுக்குப் பணிவிடை செய்ய யமதூதர்கள் மட்டுமல்ல, அநேக வகை ரோகங்களும் காத்துக்கொண்டிருக்கின்றனவாம். அரண்மனையைச்சுற்றி கிழக்குப் பக்கத்தில் ஜுரமும், தெற்குப்பக்கத்தில் வைசூரியும், சூலை நோயும், மேற்குப் பக்கத்தில் அஜீர்ணமும், வட பக்கத்தில் வயிற்றுவலியும், வடகிழக்குப் பக்கத்தில் தலைவலியும், தென்கிழக்கில் பயககமுட, வடமேற்கில் ஜன்னியும், தென்மேற்கில் அதிகாரமும், கோரவுருவங்களாக உட்கார்ந்திருக்குமாம். யமன் கட்டளையிட்டால் போதும் உடனே ஜுரம் ஒருவனைப் பிடித்துக்கொள்ளும். வைசூரி ஒரு ஊரையேத் தாக்கும், அஜீர்ணத்தால் ஒருவன் கஷ்டப்படுவான், தலைவலி வேதனை தரும். இப்படியாக ஜுரமும், வைசூரியும், வயிற்றுவலியும், தலைவலியும் வெறும் நோய்களாக இல்லாமல், யமனால் அனுப்பப்படும் கோரவுருவங்களாக ஆக்கப்பட்டுள்ளன. இந்த நோய்களெல்லாம் யமனுடைய தர்பாரில் காத்துக்கொண்டிருக்கின்றனவாம்.

## பாதாளங்கள்

நரகங்களுக்குமேல் கூஷ்மாண்ட புவனமும், அந்த கூஷ்மாண்ட புவனத்துக்குமேல், பாதாளங்களும் இருக்கின்றன.

பாதாளங்கள் ஏழுவகைப்படும். அவை ஒவ்வொன்றும் 20 லட்சம் மைல் உயரமெனக் கூறப்படுகின்றன. அந்த ஏழு பாதாளங்களும் வருமாறு :

மகாதலம் : எல்லாவற்றுக்கும் கீழாக இருக்கும் பாதாளம். இது முழுவதும் பொன்னால் ஆனது.

ரசாதலம் : மகாதலத்திற்கு மேலிருப்பது. இது வெள்ளியினால் ஆனது.

தராதலம் : மூன்றாவதாக இருப்பது. இது முழுவதும் செம்புமயமானது.

சுதலம் : தராதலத்திற்கு மேலிருக்கும் பாதாளம். இது வெண்கலத்தினால் ஆனது.

நிதலம் : ஐந்தாவதாக அமைந்துள்ளது. இந்தப் பாதாள உலகம் முழுவதும் இரும்பினால் ஆனது.

விதலம் : ஆறாவதாக அடுக்கப்பட்டுள்ள பாதாளம். இந்த உலகம் மணல்மயமானது.

அதலம் : எல்லாவற்றுக்கும் உயரத்தில் இருப்பது. இந்தப் பாதாளம் முழுவதும் மண்ணால் ஆனது.

ஏழு பாதாளங்களும், ஏழு உலகங்களால் ஆக்கப்பட்டிருக்கிறதாம். இந்த ஏழு பாதாளங்களிலும், அரசர்களும், குடிபடைகளும் இருக்கின்றனர். இந்தப் பாதாளங்களில் சூரியன் பிரகாசிக்காததால், வெளிச்சம் எப்படிக் கிடைக்கிறது என்று சிலர் கேட்கக்கூடும். அந்தக்குறையைப் பிரமதேவன் ஒருவாறு நீக்கிவிட்டார். இந்தப் பாதாளங்களில் இருக்கவென்று எட்டுலட்சம் பெண்களை அவர் உண்டாக்கினார். அவர்களுடைய திரேக காந்தியே பாதாளங்களுக்கு விளக்காகின்றதாம். இப்பாதாளப் பெண்கள் உலவிவரும்பொழுது வெளிச்சம் ஆங்காங்கு பரவுமாம். இருட்டில் இருக்கும் பாதாள வாசிகள் ஒரு பாதாளக் கன்னி வந்தால் அவளிடமிருந்து வீசுகிற திரேக காந்தியைக்கொண்டு வழிதெரிந்து, நடப்பார்கள். வெளிச்சம் தரவேண்டியவர்களாக இருப்பதால், அந்தப் பாதாளக்கன்னியர்கள் பெரும்பாலும் ஆடையெதுவுமின்றி செல்வார்கள், அதிக ஒளியைத்தர, அவ்வாறு செல்லும் ஒவ்வொரு ஒளிக்கன்னியையும் சூழ்ந்து பல பாதாளவாசிகள் சென்றுகொண்டிருப்பார்கள் என்று கூறத் தேவையில்லை!

## ஆடகேசுர புவனம்

பொன் வெள்ளி ஆகியவற்றாலாகிய ஏழு பாதாளங்களையும் உண்டாக்கி, அவற்றிற்கெல்லாம் தலைவராக ஆடகேசுரர் என்பவரை பிரமதேவர் நியமித்தார். ஆடகேசுரர் இருக்கும் உலகம், ஏழு பாதாளங்களுக்குமேல் 288 கோடி மைல் (என்ன கணக்கோ தெரியவில்லை!) உயரத்தில் இருக்கிறது. ஆடகேசுரர் இருக்கிறதால் அதற்கு ஆடகேசுர புவனம் என்று பெயர். இதற்குமேல் 100 கோடி மைல் உயரம் வந்தால் பூலோகத்தின் அடியைத் தட்டலாம்.

## பூலோகம்

அண்டங்களையெல்லாம் வர்ணிக்க வந்த புராணக்காரர்கள் மற்ற கீழ், மேல் உலகங்களைப் பற்றிக் கூறும்பொழுதுதான் கற்பனையில்

தோன்றியதையெல்லாம் எழுதிவைத்தார்கள் என்றால், அவர்கள் இருக்கிற இந்தப் பூலோகத்தைப் பற்றியாவது சரியாக எழுதிவைத்தார்களா என்றால் அதுவுங் கிடையாது. பூகோளத்தைப்பற்றிய அடிப்படை அறிவுகூடப் புராணக்காரருக்கோ, புராணங்களைத் தந்த கடவுளர்களுக்கோ இருந்ததாகத் தெரியவில்லை. பூலோகத்தைபற்றிப் புராணங்களில் எழுதிவைக்கப் பட்டிருப்பதைப் பார்த்தால், புராணக்காரர்களின் அறியாமையும், கற்பனையும் எந்த அளவுக்கு இருந்தனவென்பது தெரியும்.

புராணக்காரரின் அளவுப்படி, இந்தப் பூமியின் அகலம் 1000 கோடி மைல்களாம்! இன்றைய நான்காம் வகுப்புப் பையன புத்தகத்தைப்பார்த்தாலே, பூமியை ஒரு சுற்றுச் சுற்றிவந்தாலே 25 ஆயிரம் மைல்களிருக்கும் என்று எழுதப்பட்டிருக்கும். புராணத்தில் ஒரேயடியாக ஆயிரங் கோடி மைல் என்று புனையப்பட்டிருக்கிறது.

அதுவுமன்றி புராண வர்ணனைப்படி பூமி உருண்டையாக இல்லாமல், சமமாக, ஒரு தட்டைப்போலிருக்கிறதாம். அந்தத் தட்டுக்கு மத்தியமாக மகாமேரு மலை நிற்கிறதாம். மகாமேரு மலையின் உயரம், புராணத்தின் கணக்குப்படி, பூமிக்குமேல் 84 லட்சம் மைல்! பூமிக்குக் கீழ் புதைந்துகிடப்பது 10 லட்சம் மைல் ஆக 94 லட்சம் மைல் நீண்டு இருப்பதாகப் புராணம் கூறுகிறது! தற்காலத்திய ஆராய்ச்சிக் கணக்குப்படி, சந்திரன் நமது பூமியிலிருந்து இருக்கும் தூரம் 2 லட்சத்து 39 ஆயிரம் மைல். நமது புராணங்கள்படி பூமியிலுள்ள மலையே 84 லட்சம் மைல் உயரமென்றால், அந்த மலையின் அடிவாரத்தில் சந்திரன் ஒட்டிக்கொண்டிருக்கும். புராணக்காரர்களுக்கு அளவுகளைப்பற்றிக் கவலையே உண்டானதில்லை. கோடிக்கணக்கில், லட்சக்கணக்கில் மைல் தூரங்களைப் போட்டபடி இருந்தார்கள். முதலில் அவர்கள் நினைத்த உலகங்களே கற்பனையாக இருந்ததால், அவற்றைப் பற்றிய விவரங்கள் எல்லாம் கற்பனையாக இருந்தன. உண்மையில் அவர்களுடைய அளவுகள், வர்ணனைகள் எல்லாம் ஒரே "அளப்பாக" இருந்தன.

வேத புராணங்களை எழுதியவர்கள் இமய மலைக்கு அருகில் இருந்ததால், அதையே உலகத்துக்கு நடுநாயகமாய் வைத்துவிட்டார்கள். இமயமலையே வேதங்களில் மேருமலையென்று கூறப்படுவது. இமயமலையில் மிக உயர்ந்த இடம் 29000 அடியாகும். புராணக்காரர் கூறுகிறார் அம்மலையின் உயர்ந்த இடம் 84 லட்சம் மைல்! கொஞ்சமாவது பொருத்தமுள்ளதா? உயரங்கூடப் போகட்டும், அந்த மலையைப்பற்றி மற்ற விவரங்களைப் பார்க்கலாம்.

மலையென்றால் அடிப்பாகம் பரந்தும், உயர உயரக் குறைந்தும், உச்சியில் முனையாகியும் இருக்கும். ஆனால் புராணம் கூறுகிற மேரு மலையோ, தாமரைக்காய்போல் அடிசிறுத்தும் தலைப்பாகம் விரிந்தும் இருக்கும். அவர்கள் கணக்குப்படி, மேருமலையின் அடிப்பாகம் 19 லட்சம் மைல் அகலமுள்ளது, அதன் நுனியில் 32 லட்சம் மைல் விரிந்து இருக்கிறது! அந்த மலை பம்பரம்போன்று தலை கனத்தும், அடி குவிந்தும் இருக்கும்! இத்தகைய அபூர்வ மலைதான் பூலோகத்தின் மத்தியில் இருக்கிறது.

மேரு மலையைச் சுற்றி 9 வகைக் கண்டங்கள் இருக்கின்றன. இவைகளில் இமயத்திற்குத் தெற்கில் இருப்பது பரதகண்டம். இந்த நவ கண்டங்களையும் சூழ்ந்து ஏழு கடல்கள் இருக்கின்றன.

பூமிக்கு மத்தியில் மேரு இருக்க, மேலே குறிக்கப்பட்ட நவ கண்டங்களும், சப்த சாகரங்களும் நான்கு திக்கிலும் பரவியிருக்கின்றன. இது கீழ் உலகங்களான ருத்ரபுவனம், நரகலோகம், பாதாளம் இவைகளுக்கும், மேல் உலகங்களான இந்திரலோகம், சந்திரலோகம் இவைகளுக்கும் மத்தியமாக இருப்பதால், பூவுலகத்தைப் புராணகாரர்கள் மத்திய உலகம் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த மத்தியவுலகத்தில் நரர் என்று சொல்லப்படுகிற மனித வர்க்கத்தினர் அற்ப வாழ்வுள்ளவர்களாய், சுக துக்கங்களுக்கு ஆளானவர்களாய், பிரமதேவனால் படைக்கப்பட்டார்.

இந்த மத்திய உலகத்துக்குமேல்தான், மேல் உலகங்களான புவலோகம், சூரிய, சந்தர லோகங்கள், மகாலோகம், பிதிர்லோகம், தபோலோகம், பிரம்மலோகம், வைகுண்டம், கைலாசம் முதலியன இருக்கின்றன—இருக்கின்றன வென்று இந்துமதத்தின் வேத புராணங்கள் கூறுகின்றன, இனி அவற்றையும் கவனிக்கலாம்.

(தொடரும்)

# வியப்புக்குரிய வானொலி

ஒரு சிறு பெட்டி! அதிலுள்ள ஆணி ஒன்றை மயிரிழை முடுக்கினால் அமெரிக்காவிலிருந்து பேசுவோரின் குரல் கேட்கிறது! இன்னும் சிறிது திருகினால் இலண்டனிலிருந்து பாடுவோரின் இசை கேட்கிறது! இப்படியாக உலகிலுள்ள எந்த நாட்டவர் கூறும் செய்திகளையும், பேசும் பேச்சுக்களையும், பாடும் பாட்டுக்களையும் கேட்டு மகிழ அச்சிறு பெட்டி உதவிசெய்கிறது! அந்தச் சிறு பெட்டிக்கும் பிற நாடுகளுக்கும் எவ்வித நேரடித் தொடர்பும் இருப்பதாகக் கண்ணுக்குப் புலப்படுவதில்லை; என்றாலும் அவைகளின் குரலைக் கேட்கிறோம்! அதுவும் குரல் எழுப்பப்பட்டு ஒரு நொடிப்பொழுது (செகண்டு) ஆவதற்குள், அந்தக் குரலை நாம் கேட்டுவிடுகிறோம்! அத்தகைய சிறு பெட்டியைப்பற்றி எண்ணுந்தோறும், எண்ணுந்தோறும் வியப்பும், மகிழ்ச்சியும் ஒவ்வொருவர் உள்ளத்திலேயும் பொங்கி எழுந்தவண்ணமிருக்கவேசெய்யும்! அந்தப் பெட்டியைத்தான் ஒலிபரப்பிப் பெட்டி அல்லது வானொலிப் பெட்டி என்று அழைக்கிறோம்!

தொலைவிலுள்ளவர்களின் குரலைக்கேட்பது போலவும், 'அசரீரி' தோன்றி ஏதேதோ சொல்லுவதுபோலவும் நமது முன்னோர்கள் கற்பனை செய்துபார்த்தார்கள்; அத்தகைய கற்பனைகளிலே திளைத்து மகிழ்ச்சியுற்றிருக்கவும் கற்றுக்கொண்டார்கள். ஆனால் அத்தகைய கற்பனை, அவர்களின் பகற்கனவாகும்— அவர்கள் கண்ட பொய்த்தோற்றமாகும். அவர்களின் கனவை நனவாக்கி, கற்பனையை உண்மையாக்கி உலகிலுள்ள எவரும் அதன்பயனை நுகரும்படி செய்தபெருமை அறிவியல் அறிஞர்களைச் சார்ந்ததாகும். முன்னோர்களான மதவாதிகள் ஆண்டவன் அருளைப் பெற்றுச் செய்ததாகப் புளுகினார்கள்; ஆனால் அறிவியல் அறிஞர்கள் தம் அறிவைப் பயன்படுத்தி நிரூபித்துக் காட்டினார்கள்!

அறிவியல் கண்டுபிடித்து அவனிக்கு அளித்த வியப்புக்குரிய அரியவைகளில் ஒலிபரப்பி அல்லது வானொலி மிகச்சிறந்த ஒன்றாகும். உலகின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்குச் செய்தியை அனுப்புவதற்கு ஏற்ற கருவிகளாகக் கண்டுபிடிக்கப்பட்ட தொலையறிவிப்பி, தொலைபேசி, வானொலி ஆகிய மூன்றில் மூன்றாவதாக ஏற்பட்ட வானொலி, முன்னவை இரண்டின் புகழையும் மங்கச் செய்துவிட்டது. வானொலியின்மூலம் கிடைத்த அறிவியல் அறிவு, நோய்களைப் பண்படுத்துதல், ஆற்றல்களை அடக்குதல், கடலிலே கப்பலைச் செலுத்துதல், வானிலே ஊர்தியை ஓட்டுதல், தொலைக்காட்சியைக்காணுதல், வெடிகுண்டுகளை வீழ்த்துதல் போன்ற பல்வேறு துறைகளுக்குப் பயன்படுவதாக நாளடைவில் அமைந்துவிட்டது. வானொலியால் பெற்ற பயனும், பெறவேண்டிய பயனும் ஏராளமாகும்.

வானொலியைக் கண்டுபிடிக்கும் வழியை அமைத்தவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய மூவர் ஜேம்ஸ் கிளார்க் மாக்ஸ்வெல் (James clerk Maxwell) என்ற ஆங்கிலேயரும், ஹெயின்ரிச் ஹெர்ட்ஸ் (Heinrich Hertz) என்ற ஜெர்மானியரும், கக்லியேல்மோ மார்க்கோனி (Guglielmo Marconi) என்ற இத்தாலியரும் ஆவார்கள். வேறு சிற்சிலரும் கூட இந்தத் துறையில் சிற்சில வழிகளைச் செப்பனிட்டார்கள்.

மாக்ஸ்வெல் கம்பியில்லாமலேயே ஒலியை வான்வெளி வழியே பரப்பமுடியும் என்பதற்கான அடிப்படைக் கொள்கைகளைக் கண்டுபிடித்தார். ஹெர்ட்ஸ் கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் வானொலி அலைகளைக் கண்டுபிடித்து, அவற்றைச் செயலாற்றில் நடப்பித்துக்காட்டினார். மார்கோனி அந்தக் கருத்துக்களை நடைமுறையில் பயன்படுத்துவதற்கான கருவிகளைக் கண்டுபிடித்தார்.

மாக்ஸ்வெல் 1831-ம் ஆண்டில் பிறந்தவர். அவர் நியூட்டனைப்போன்று புதிது கண்டுபிடிக்கும் ஆற்றலுணர்ச்சி படைத்தவர். அவர் மின்னாற்றலும், ஒளியும் ஒரே பொருளின் பகுதிகளாக இருக்கக்கூடும் என்று ஐயப்பட்டார். கடலின் அலைகள் தண்ணீரில் ஒரேமாதிரியான அலைகளாக ஏறி இறங்கிப்போவதைப்போல், ஓசையின் அலைகள் காற்றில் ஒரே அளவில் ஏறி இறங்கிப்போவதைப்போல் மின் ஆற்றலின் அலைகளும் ஒளியின் அலைகளும் இன்னதென்று கண்டுபிடிக்கப்படாமலிருக்கிற ஈதரில் அளவோடு அலைகளாகச் செல்லவேண்டும் என்று ஊகித்தார். மின்னாற்றல் அலையின் வேகத்தைக் கண்டுபிடிக்க அவர் பெரிதும் முயன்றார். மின்னாற்றல் அலையின் ஒரு முகட்டிற்கும், மற்றொரு முகட்டிற்கும் இடையிலுள்ள நீளத்தை அளக்க அப்போது கருவிகள் கண்டுபிடிக்கப்படவில்லை; எனவே அவர் பல்வேறு கணக்குகள் போட்டு, அளவுகள் எடுத்து, மின் ஆற்றலும், ஒளியும் செகண்டிற்கு 1,86,000 மைல் வேகத்தில் செல்லக்கூடியவையாக இருக்கின்றன என்று கண்டறிந்தார். மின்னாற்றல் அலையைப்பற்றிக் கண்டறிந்த உண்மை கம்பியில்லாச் செய்தி அனுப்புவதற்கான வழிவகுப்பதாக அமைந்தது.

மாக்ஸ்வெல் இந்த உண்மையைக் கண்டுபிடித்து இருபத்து மூன்று ஆண்டுகள் ஆன பிறகு, ஹெர்ட்ஸ் அதன் உண்மையைத் தெளிவாக விளக்கிக் காட்டினார். வானொலி அலைகள் ஹெர்ட்சினால் தெளிவாக்கப்பட்டதால், அவற்றிற்கு ஹெர்ட்ஸ் அலைகள் என்று பெயரிடப்பட்டது. மாக்ஸ்வெல்லும், ஹெர்ட்சும் கண்டுபிடித்த உண்மைகளை வைத்துக்கொண்டு, அவற்றை நடைமுறையில் பயன்படுத்திக் காட்டியவன் மார்க்கோனி என்ற இத்தாலி நாட்டைச் சேர்ந்த, இருபது வயதே நிரம்பப்பெற்ற இளம் அறிவியல் அறிஞனாவான்.

மார்க்கோனியின் அறிவியல் ஆசிரியரான பேராசிரியர் ரிகி (Righi) என்பவர் மின் ஆற்றல்பற்றிப் பல்வேறு பாடங்களைச் சொல்லிக் கொடுத்தார். அவர் இரண்டு கம்பிச் சுருள்களைச் சிறிது இடைவெளி விட்டுத் தனித்தனியே வைத்திருந்தார். ஒரு கம்பிச்சுருளை இரண்டாக வெட்டிவிட்டு அதன் வழியாக மின்னாற்றலைப் பாயச்செய்து பார்த்துக்கொண்டிருந்தார். மின்னாற்றல் கம்பியின் வழியாகப் பாய்ந்து மற்றொரு முனையை மின்னொளியுடன் தாவிப்பிடித்தது. மார்க்கோனிக்கு இது மிக்க வியப்புணர்ச்சியைத் தந்தது. அதைவிட இன்னும் அதிகமாக அவருக்கு வியப்புணர்ச்சியை ஊட்டியது எதுவென்றால், மின்னாற்றல் அந்த ஒரு சுருள்கம்பியில்மட்டும் ஓடாமல், தள்ளிவைக்கப்பட்டிருந்த சுருள்கம்பியிலும் அதிர்ச்சி கொடுத்தது. மீண்டும் மீண்டும் அப்படிப்பட்ட ஆராய்ச்சியைச் செய்துபார்த்தார்; திரும்பத் திரும்ப மற்றொரு சுருள் கம்பியிலும் அதிர்ச்சி ஏற்படுவதைக் கண்டார். அதிலிருந்து அவர் கண்ட உண்மை என்னவென்றால், ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மின்னாற்றலை அனுப்ப இடையில் கம்பி வேண்டுமென்பது அவசியமில்லை; கம்பியில்லாமலும் செல்லும் என்பதாகும். மார்க்கோனி அந்த உண்மையை வைத்துக்கொண்டு பல்வேறு முயற்சிகளில் ஈடுபடலானார்.

அவர் அவரது தந்தையார் அளித்த பணவசதியை வைத்துக்கொண்டு தமது தோட்டத்தில் ஆராய்ச்சி நடத்த முற்பட்டார். தோட்டத்தின் எதிர் எதிரான இரண்டு பக்கத்திலும் இரண்டு உயரமான கம்பங்களை நட்டார். இடையிலே இடைவெளியுடைய ஒரு கம்பியின் இரு முனைகளையும் இரண்டு கம்பங்களிலும் கட்டினார். ஒரு பக்கத்தில் "கட், கட" என்று அடிப்பதற்காகத் தொலையறிவிப்பிக் கருவி ஒன்றைப் பொருத்தினார். மற்றொரு பக்கத்தில் "கட், கட" ஒலியைக் கேட்பதற்காகத் தொலைபேசிக் கருவி ஒன்றைப் பொருத்தினார். ஹெர்ட்ஸ் இடையில் சில அடிகள் தொலைவு வைத்து மின்னாற்றலைப் பாயச்செய்து ஆராய்ச்சி நடத்தினார்; ஆனால் மார்க்கோனி இடையில் ஒருமைல் தொலைவு வைத்துத் தம் தோட்டத்தில் ஆராய்ச்சி நடத்தினார். இடையில் மலையைவைத்து வானொலி அலைகளை அப்பால் செலுத்திப் பார்த்தார். மலையைத் தாண்டியும் போவதைக் கண்டார்; மலை இடை—

யில் தடுத்து நிற்பதால் யாதொரு மாற்றமும் ஏற்படவில்லை என்பதைக் கண்டுகொண்டார். ஒலியை வாங்குவதற்கு வான்வெளியில் நீண்ட கம்பியாகக் கட்டிவிட்டால், அதில் தெளிவாக மின் அலைகள் படுவதைக் கண்டார். இவ்வாறு கம்பியில்லாத் தந்தியைக் கண்டுபிடித்தார்.

அவர் தமது கண்டுபிடிப்பை எடுத்துக் கொண்டு 1896-ம் ஆண்டு இங்கிலாந்து சென்று, பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் அதனை விளக்கிக் காட்டினார். மறு ஆண்டு மார்க்கோனி கம்பியில்லாத் தந்திக் கம்பெனி ஒன்று நிறுவப்பெற்றது. மார்க்கோனி இடையில் இங்கிலீஷ் கால்வாய் இருக்க லண்டனுக்கும், சாலிஸ்பரி வெட்டவெளிக்கும் கம்பியில்லாத் தந்தியின் மூலம் செய்திகளை அனுப்ப முயன்றார். அதில் யாவரும் வியப்புறும் வண்ணம் வெற்றிபெற்றார். 1898-ம் ஆண்டில் பிரிட்டிஷ் கப்பல்களில் கம்பியில்லாத் தந்தி பொருத்தப்பட்டது. ஒரு முறை விக்டோரியா பேரரசியார், நீண்ட தொலைவில் கப்பலில் இருந்த வேல்ஸ் இளவரசருக்குச் செய்தியை அனுப்ப, கம்பியில்லாத் தந்தியைப் பயன்படுத்திக்கொண்டார். மார்க்கோனியின் கண்டுபிடிப்பு நாட்டோடு நாட்டை மிக அண்மையில் கொண்டுவரவும், ஒன்றோடொன்று மிக எளிய முறையில் செய்திகளைப் பரிமாறிக்கொள்ளவும் மிகவும் பயன்படுவதொன்றாக அமைந்தது.

மிகக் குறுகிய காலத்தில், ஆங்காங்கு, கம்பியில்லாத் தந்தி முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. கம்பியில்லாத் தந்தி சிறிது தொலைவிலுள்ள இடங்களோடு தொடர்புகொள்ளத்தான் பயன்படுமேயல்லாது, நீண்டதொலைவுக்குச் செய்தி அனுப்பப் பயன்படாது, ஏனெனில் உலகம் உருண்டைவடிவாக இருப்பதால் மின் அலைகள் சென்று சேரா என்று சிலர் ஐயப்பட்டனர். மார்க்கோனி அதையும் ஆராய்ச்சி செய்துபார்க்க முற்பட்டார். இடையில் அட்லாண்டிக் மாக்கடலை வைத்து, இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவிலுள்ள நியூபொண்ட்லாந்துக்குச் செய்தியனுப்ப முயற்சி செய்தார். இங்கிலாந்தில் தொலையறிவிப்பிக் கருவியின் மூலம் ஒரு குறிப்பிட்ட நாளில், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் "கட், கட" என்பனபோன்ற ஒலியை எழுப்பச் செய்தார். அதேநேரத்தில் அவர் நியூபொண்ட்லாந்தில் இருந்துகொண்டு தொலைபேசிக் கருவியை ஒரு பட்டத்தோடு சேர்த்துக்கட்டி நானூறு அடி உயரத்தில் பறக்கவிட்டு, இங்கிலாந்திலிருந்து அனுப்பப்படும் செய்தியைக் கேட்க முயற்சித்துக்கொண்டிருந்தார். இங்கிலாந்தில் தொலையறிவிப்பியின் மூலம் செய்தி அனுப்பப்பட்ட அதே நேரத்தில், அந்தச் செய்தியை. மார்க்கோனி மிகத் தெளிவாகக் கேட்டறிந்தார். உலகில் எவ்வளவு தொலைவானாலும், கம்பியில்லாத் தந்தியின்மூலம் செய்தி அனுப்ப எவ்விதத் தடையும் ஏற்படாது என்ற உண்மையை மார்க்கோனி நிலைநாட்டினார்.

1903-ம் ஆண்டில் அட்லாண்டிக் மாக்கடலில் இரண்டு கப்பல்கள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ள, அந்தச் செய்தி கம்பியில்லாத்தந்தியின்மூலம் உடனே உள்நாட்டுக்கு அனுப்பப்பட்டது. இப்பொழுது ஒவ்வொரு கப்பலும் தங்கள் தங்கள் நாட்டுடனும், பிற நாட்டுடனும் தொடர்பு வைத்துக்கொள்ள, கம்பியில்லாத் தந்தியைத்தான் பயன்படுத்திக் கொள்கின்றன.

1924-ல் மார்க்கோனியின் ஆராய்ச்சி மேலும் ஒருபடி முன்னேறிப் புதிய பல உண்மைகளை உலகுக்கு உணர்த்திற்று. கம்பியில்லாத் தந்தியின் அலைகள் வளைந்த கோடுகளில் செல்லாமல் அவைகளை நேர்கோட்டிற் செலுத்துவதற்கான முறையை மார்க்கோனி கண்டுபிடித்தார். இந்த முறை மேலும் புதிய புதிய கண்டுபிடிப்புகளுக்குக் காரணமாகவும், அடிப்படையாகவும் அமைந்தது. மார்க்கோனியின் அறிவியல் திறனால் ஆற்றல் மிகுந்த பல வானொலி நிலையங்களும், விதவிதமான வானொலிப் பெட்டிகளும் உலகெங்கும் நிறைந்து காணப்படுகின்றன.

வானொலி அலைகளின்மூலம் விமான ஓட்டிகள் இல்லாமலேயே விமானங்கள் பறக்கிற நிலையும், எல்லாவிதமான போக்குவரத்துக்களும் வானொலி அலைகளின்மூலம் இயக்கப்படுகிற நிலையும், அவை எல்லாவிதமான நோய்களையும் போக்கும் அருமருந்தாக அமைகிற நிலையும் ஏற்படும் காலம் நீண்ட தொலைவில் இல்லை; மிக அண்மைக் காலத்திலேயே நாம் அவற்றையெல்லாம் காணக்கூடும்.

பிரிட்டிஷ், ஜெர்மன் அறிவியல் அறிஞர்கள் கண்டுபிடித்த அறிவியல் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, இருபது ஆண்டுகளே நிறையப்பெற்ற இத்தாலி இளைஞன் மார்க்

# அறிவியலும் மதவியலும்

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

கிருஸ்தவ உலகத்தில் மதம் ஆதிக்கம் செலுத்தியிருந்தபோது, பல நூற்றாண்டுகள் இருளிலேயே உருண்டோடின. மூடநம்பிக்கை எங்கணும் நிலவிவந்தது. இருபதினாயிரத்தில் ஒருவருக்குக்கூட, படிக்கவோ அல்லது எழுதவோ தெரியாது. அந்த நூற்றாண்டுகளி லெல்லாம், மக்கள், அறிவுஞாயிற்றுத் தோற்றத் தின்பக்கம் தங்கள் முதுகைக் காட்டிக்கொண்டு, அறியாமையும் பக்தியுமாகிய இருட்காடுகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது முன்னேற்றம் எதுவுமில்லை; கண்டுபிடிப்பு எதுவுமில்லை; ஆராய்ச்சி முடிவு எதுவுமில்லை. எங்குபார்த்தாலும், வாதனையும் வழிபாடும், குற்றஞ் சாட்டலும் துதிபாடலும் நிறைந்திருந்தன. மதப் புரோகிதர்கள் சிந்தனைக்கும், ஆராய்ச்சியறிவுக்கும் பகைவர்களாக இருந்தார்கள். அவர்கள் ஆட்டிடையர்களாக இருந்தார்கள்; மக்கள் ஆடுகளாக இருந்தார்கள். சிந்தனை, ஐயப்பாடு என்ற ஓநாய்களிடமிருந்து அந்த ஆட்டுக்கூட்டத்தைக் காப்பாற்றுவதே அவர்களுடைய முக்கிய தொழில். மேல் உலகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தபோது, இவ்வுலகம் ஒரு பயனும் உடையதாகக் காணப்படவில்லை. வருங்கால வாழ்வுக்குத் தயார்படுத்திக்கொள்ளும் முறையிலேயே இவ்வாழ்வு செலவழிக்கப்படவேண்டியதாகக் கருதப்பட்டது. மக்களுடைய பொன்னும் உழைப்பும் தேவாலயக்கட்டிடங்களைக் கட்டுவதற்கும், வைதீகப்-பயனற்ற கூட்டத்தைக் காப்பாற்றுவதற்கும் வீணே செலவழிக்கப்பட்டன. நான் முன்பு கூறியதுபோல, கிருஸ்துவத்தின் இந்த இருண்ட காலங்களில், ஏதொன்றும் கண்டுபிடிக்கப்படவில்லை; ஏதொன்றும் ஆராய்ச்சி செய்யப்படவில்லை; மனித வாழ்வு உயர்வதற்கான ஏதொரு திட்டமும் தீட்டப்படவில்லை. இயற்கையை மீறிய ஆற்றலிடமிருந்து, உதவியைப் பெறவேண்டி, கிருஸ்தவ உலகின் உழைப்பாற்றல்களெல்லாம் வீணாக்கப்பட்டன.

பல நூற்றாண்டுகள் வரையிலும், கிருஸ்தவர்கள், கிருஸ்துவின் வெறும் கல்லறையை மீட்பதற்காக, மகம்மதுவைப் பின்பற்றினவர்களோடுப், போரிடுவதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். இந்தக் கவைக்குதவாத கடவுள் பீடத்தின்மீது கோடிக்கணக்கான மக்களின் உயிர்கள் பலியிடப்பட்டன; அப்படியிருந்தும் எதிரியின் படை வீரர்களே வெற்றி பெற்றனர்; கிருஸ்துவின் கொடியை ஏந்திச் சென்றவர்கள், புயற்காற்றின்முன் இலைகளைப் போல சிதறுண்டுபோனார்கள்.

அந்த இருண்ட காலங்களில், ஒரே ஒரு கண்டுபிடிப்பு நடந்தேறியதாக நான் நினைக்கிறேன். அதுதான் வெடிமருந்துக் கண்டுபிடிப்பு. கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த ரோஜர் பேக்கன் என்ற மடாலய பாதிரியார் ஒருவர், வெடிமருந்தைக் கண்டுபிடித்தார்: ஆனாலும் ஆண்டவனுடைய ஆசியில்லாமலேயேதான் கண்டுபிடித்தார். என்றாலும், இந்தப் பெருமை நாம் கிருஸ்தவமதத்திற்குக் கொடுப்பதற்கில்லை; ஏனென்றால்,

---

கோனி மக்கட் சமுதாயத்திற்குச் செய்துள்ள நன்மை அளப்பறியதாகும். 'ஆண்டவன் தூதர்கள்' மக்கட் சமுதாயத்திற்குப் புரிந்த நன்மைகளைவிட பதினாயிரக்கணக்கான மடங்கு—நூறாயிரக்கணக்கான மடங்கு மிக்க நன்மையை மார்க்கோனி உலகிற்குச் செய்துள்ளான். வாழ்க என்றென்றும் அவனது புகழ்!

ரோஜர் பேக்கன், மத எதிரி என்று சொல்லி ஒதுக்கப்பட்டவர்; இம்மாதிரியான செயல்களில் பகுத்தறிவுதான் நிலைக்களனாக நின்று வேலை செய்திருக்கவேண்டும் என்று மதவாதிகள் கருதினர். அந்த வைதீக நாட்களில், அறிவுடைய மக்களுக்கு எப்படிப்பட்ட கொடுமைகள் இழைக்கப்பட்டனவோ, அவற்றையொட்டியே, ரோஜர் பேக்கனும் குற்றஞ்சாட்டப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். மாதாகோயில் வெற்றிவீரனாக நின்றது. வாளும் கேடயமும் அதன் கையில் இருந்தன; அப்படியிருந்தும், நாணயமற்றபோக்கையும் வலிவையும் உதவியாகக் கொண்டு வெற்றிபெற்றது. அது தனக்குள்ளேயே தோல்வி என்னும் விதைகளை விதைத்துக்கொண்டது. மாதாகோயில் நடக்கமுடியாத செயல்களுக்காக முயன்று பார்த்தது. உலகத்தை ஒரே நம்பிக்கையின் கீழ் கொண்டுவரவேண்டும் என்று அரும்பாடுபட்டது; எல்லோருடைய உள்ளங்களையும் ஒரு பொதுத்தன்மைக்கு மறப்புரட்சி மூலம் கொண்டுவருவதற்கும் மனிதனின் தனித்தன்மையை அடியோடு அழிப்பதற்கும் ஆனவரையில் பாடுபட்டது. இதனை நிறைவேற்றிவைக்க, அது, தந்திரம் சொல்லிக் கொடுத்த எல்லாவித வித்தைகளையும், முறைகளையும் கையாண்டு பார்த்தது. குற்ற உள்ளம் கண்டுபிடித்துக் கூறிய எல்லாவித முறைகளையும் அது கடைப்பிடித்துப்பார்த்தது.

ஆனால், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் நடந்தேறியுங்கூட, சிலமனிதர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள். அவர்கள் உலகை நடவடிக்கைகளிலும், இயற்கையின் பெரிய கண்காட்சியிலும் விருப்பஞ் செலுத்தத் தலைப்பட்டார்கள். அவர்கள் ஒவ்வொரு வியப்புக்குரிய நிகழ்ச்சிக்குள்ள காரணங்களையும், விளக்கங்களையும் தேடத் தொடங்கினார்கள். மாதாகோயில் சரியென்று நிலைநாட்டின கொள்கைகளைக் கொண்டு அவர்கள் மனநிறைவு கொள்ளவில்லை. இந்தச் சிந்தனையாளர்கள் வானுலகை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்ததை நிறுத்திவிட்டுத், தங்களுடைய சூழ்நிலைகளை உற்றுக் கவனிக்கத்தொடங்கினர். அவர்கள், இவ்வுலக நலத்தை விரும்பும் அளவுக்கு ஆத்மார்த்தமற்றவர்களாகவே இருந்தனர். அவர்கள், உணர்ச்சிகள் வயப்பட்டவர்களாகவும் மதச்சார்பற்றவர்களாகவும், உலகவாழ்வில் திளைத்தவர்களாகவும் பேரறிவுகொண்டவர்களாகவும் திகழ்ந்தார்கள்.

முடிவு என்ன? அவர்கள், புதிது கண்டுபிடிக்கவும், புதியன ஆராயவும், உண்மைகளுக்கிடையேயுள்ள தொடர்பை அறியவும், மகிழ்ச்சிக்குரிய காரணங்களைக் கண்டறியவும், தங்கள் உடன் வாழும் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான வழிகள் யாவை என்பதைக் கண்டறியவும் தலைப்பட்டார்கள்!

கோர்க்கும் அச்செழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டன; மூர் வகுப்பினரிடமிருந்து காகிதம் பெற்றுக்கொள்ளப்பட்டது; புத்தகங்கள் வெளியிடப்பட்டன; ஒவ்வொரு தலைமுறையினரும் வருங்காலத் தலைமுறையினர்க்கு அறிவுச் செல்வத்தைச் சேமித்துவைத்துக் கொடுக்கக்கூடிய வகையில் ஏதுவான நிலைமை ஏற்பட்டது. கட்டுக்கதைகளும் வதந்திகளும் உலாவிவந்த இடத்தை வரலாறு பிடித்துக் கொள்ள ஆரம்பித்தது. தொலைநோக்கு ஆடி (தூரதிருஷ்டிக் கண்ணாடி) கண்டுபிடிக்கப்பட்டது. நட்சத்திரங்களின் நிலைமையும் இருப்பிடமும் கண்டுபிடிக்கப்பட்டன; மக்கள் அண்டத்தின் குடிமக்களாக மாறினர். நீராவிப் புகைவண்டி கட்டப்பட்டது; பெரிய வேலைக்காரனாக நீராவி, கோடிக்கணக்கான மக்களின் வேலையைச் செய்துவருகிறது. நடக்கமுடியாதவைகளான "கற்பனை அதிசயம்" ஒதுக்கித் தள்ளப்பட்டது; பயன்படும் கலவையியல், அதனுடைய இடத்தைப் பற்றிக்கொண்டது. வான ஜோஸ்யம் வான இயலாக மாறிற்று. மனித அறிவின் மிகப்பெரிய முயற்சிகளில் மிக முக்கியமானவையாகக் கருதப்படும் மூன்று விதிகளைக் கெப்லர் கண்டுபிடித்தார். நட்சத்திரக் கூட்டத்தைப் பற்றிக் கொண்டிருந்த கருத்து இப்பொழுது கவிதையாகவும், பாட்டாகவும் ஆகிவிட்டது நில ஈர்ப்பின் தொடர்பான கணக்கு விதிகளை, நியூட்டன் நமக்கு அளித்தார். குருதியோட்டத்தின் அமைப்பினை ஹார்வி கண்டுபிடித்தார். அவர் அதன் உண்மையை நமக்குக் கூறினார்; டிராப்பர் அதற்கான காரணத்தை நமக்குக் கொடுத்தார். நீராவிக் கப்பல்கள் அலைகடல்களை வென்றன; புகைவண்டித் தொடர்கள் நிலத்தை நிரப்பின. வீடுகளும் தெருக்களும், புகைக்காற்றால் ஒளி பெறச் செய்யப்பட்டன. தீக்குச்சிக் கண்டுபிடிக்கப்பட்டதன் மூலம், நெருப்பு மனிதனின் நெருங்கிய நண்பனாக மாறிவிட்டது. நிழற்படம் எடுக்கும் கலை எல்லோர்க்கும் தெரிந்ததாக வளர்ந்துவிட்டது; கதிரவன் ஓவியக்

கலைஞனாக மாறிவிட்டான். நிலம்வழித் தந்திகளும், கடல்வழித் தந்திகளும் கண்டுபிடிக்கப்பட்டன. மின்னாற்றல் செய்திகளை ஏந்திச் செல்லும் ஏதுவாயிற்று; நாடுகள் ஒன்றுக்கொன்று நெருக்கமுடையனவாக வளர்ந்தன. மயக்க மருந்து கண்டுபிடிக்கப்பட்டது; வலி தூக்கத்தில் மறக்கடிக்கப்பட்டது. புண்ணாற்றல் ஒரு அறிவியலாக வளரத்தொடங்கியது. தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டது; அது கேட்கும் செவிகளுக்கு அலைகளாகிய சொற்களைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. இசைப்பெட்டி, புள்ளிகளையும் கோடுகளையும் இசைத்தட்டிலே பெற்றுக்கொண்டு, நமது பேச்சையே நமக்கு மீண்டும் எதிரொலியாகத் தருகிறது.

பிறகு மின்னொளி வந்தது; இரவை பகலாக்கிக்காட்டுகிறது; எந்த மின்னாற்றல் கோடை மேகத்திலிருந்து கிளம்பி பாழையும் அழிவையும் உண்டாக்கிற்றோ, அதே மின்னாற்றல், வியப்புக்குரிய பொறிகளை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. முக்கோண ஸ்படிகக் கற்களின் ஆராய்ச்சிகள், கதிரவனின் ஒளிக்கதிரிலுள்ள பொருள்களைத் தெளிவாக்கிக் காட்டுகின்றன. சிறந்த பெருஞ் சிந்தனையாளர்கள், பொருள்—ஆற்றல் ஆகியவற்றின் அழிக்க முடியாத தன்மையைப் பற்றியும், அழிக்கமுடியாத தன்மை பெற்றவைகளை உண்டாக்கமுடியாது என்பதைப்பற்றியும் நிரூபித்துக்காட்டினார்கள். நிலயியல் ஆராய்ச்சியாளர்கள் பாறைகளிலும் கண்டங்களிலும், மலைகளிலும் மண்ணடுக்குகளிலும் அடங்கிக்கிடக்கும் பொருள்களையும், அவற்றிற்குள் உள்ள மாறுபாடுகளையும் கண்டறிந்து, உலக வரலாற்றின் கதையைச் சிறிதளவு கூறினார்கள்; மரவியலின் கதையையும், விலங்கியலின் கதையையும் கூறினார்கள். மனித விலங்கியல் ஆராய்ச்சியாளர்கள், பல்வேறு விதமான எலும்புக்கூடுகளையெல்லாம் ஆராய்ந்துபார்த்து, மனிதனின் தொடக்கத் தலைமுறைகளை விளக்கிக்காட்டினர்; புனித வேதம் எவ்வளவு பிற்போக்கானது என்பதையும் அவர்கள் நிரூபித்துக் காட்டினார்கள். பின்னர், உள்ளது சிறத்தல் கொள்கை வளர்ந்தது; பொருத்தம் ஏற்படுத்திக்கொண்டன வாழ்தலும், இயற்கையான தேர்வு செய்து கொள்ளலும் ஆன கொள்கைகள் இடம்பெற்றன. ஆயிரக்கணக்கான அதிசயக் காட்சிகளுக்கு விளக்கந்தரப்பட்டன; அறிவியல் மூடநம்பிக்கை ஏந்தியிருந்த வாளை தாக்கி முறித்துப்போட்டது. உயிரணுவின் கொள்கை வளர்ந்தோங்கியது; உயிரணுக்களின் கருத்தோற்றம் ஆராய்ச்சி செய்யப்பட்டது; நுண்நோக்கு ஆடி (பூதக்கண்ணாடி) நோய்தரும் கிருமிகளைக் கண்டுபிடித்துச் சொல்லிற்று; பிளேக்கை எப்படித் தடுக்கலாம் என்பதற்கான முறையையும் சொல்லிக்கொடுத்தது. எண்ணற்ற கண்டுபிடிப்புகளோடு கூடிய இந்தக் கொள்கைகளும், ஆராய்ச்சி முடிவுகளும், விடுதலையறிவின் குழந்தைகளாகும்!



★★

## கண்டதும் காணாததும்

“கடற்கரையின் ஓரத்தில் மற்ற விளையாட்டுக் குழந்தைகளைக் காட்டிலும் அழகான சில கூழாங்கற்களையோ அல்லது வனப்பான சில கிளிஞ்சல்களையோ கண்டெடுக்கும் ஒரு விளையாட்டுக் குழந்தைபோல் நான் இருந்துவருகிறேன்; ஆனால் என் முன்னால் கண்டுபிடிக்கப்படாத உண்மைகள் கரையற்ற கழிபெருங் கடல்போல் பரந்துகிடக்கின்றன.”

—சர். ஐஸக் நியூடன்.

## நம்ப வழி

“நம்புவதற்கான நல்ல அடிப்படைகளை எங்களுக்கு நீங்கள் உணர்த்துவீர்களானால், எதனையும் நம்ப நாங்கள் தடை ஏதும் சொல்ல மாட்டோம்; ஆனால் உங்களால் அப்படிப்பட்ட அடிப்படைகளை உணர்த்தமுடியவில்லையானால், நாங்கள் எதனையும் மரியாதையுடன் மறுத்தே தீருவோம். பொய்மையிலிருந்து எந்த நன்மையும் எப்பொழுதும் வெளிப்படாது.”

—ஆர்பர்ட் ரஸ்ஸல் வாலஸ்.

இலக்கியம்

# கனவில் வந்த காதலன்

[எழினி]

தலைவனின் அறிவுத்திறனையும், அன்பு உள்ளத்தையும் கண்டு மயங்கி, அவற்றிலே திளைத்து நின்று, அப்படிப்பட்ட பண்பாடமைந்த தலைவன், தன்னைவிட்டு ஒருநாளும் பிரியமாட்டான் என்ற எண்ணத்தில்தான் தலைவி இன்ப உலகில் நடமாடி வருகிறாள். என்றாலும் ஒருநாள் அவளது எண்ணம் சுக்குநூறாக உடைத்தெறியப்படுகிறது. தலைவன் தலைவியைக் கைவிட்டுவிட்டு ஓடிவிடுகிறான். அதுவரையில் அவள் கண்டிராத துன்ப உலகிற்கு அவள் விரட்டியடிக்கப்படுகிறாள். பிரிவாற்றாமையால் தாங்கமுடியாத துயரம் அவளது உள்ளத்தைக் குடைகிறது. அவளது உடல் இளைக்கிறது. கைவளையல்களும், அணிகலன்களும் உடல்மெலிவால் கழன்று வீழ்கின்றன. அவளது அழுத கண்ணீரும், அவிழ்ந்த கூந்தலும், நெகிழ்ந்த ஆடையும், அழகு அழிந்த முகமும் அவளது துன்ப உள்ளத்தை வெளிப்படுத்தும் அளவுகோல்களாக அமைந்திருக்கின்றன.

தலைவியைத் தோழி எவ்வளவோ தேற்றிப் பார்க்கிறாள்; தலைவியின் துயரம் அடங்குவதாக இல்லை.

"அவர் எங்கே போயிருப்பார்?" என்று தோழி தலைவியை வினவுகிறாள்.

அதற்குத் தலைவி, "அவர் எங்கேடீ போயிருப்பார்! அவரது சொந்த இடமாகிய கடற்கரையை அடுத்துள்ள காட்டிற்குத்தான் போயிருப்பார்! வேறு எங்கு போயிருக்கப் போகிறார்!" என்று கூறுகிறாள்.

"உன்னை விட்டுப்பிரிந்த அவர் எப்படியடீ உயிர்வாழ்வார்? அவராகச் சென்றிருக்கமாட்டாரடீ! அவரை யாரோ வலுக்கட்டாயமாக அழைத்துக்கொண்டு போயிருக்கவேண்டும்! அவர் உன்னை வேண்டுமென்றே விட்டுவிட்டுச் சென்றுவிட்டார் என்பதை என்னால் நம்பவே முடியவில்லையே!" என்று தோழி சொல்லுகிறாள்.

"அவருக்கு என்னிடத்தில் மாறாத அன்பு இருப்பதுபோலல்லவா நினைத்துக்கொண்டு நீ பேசுகிறாய்! அவருக்கு என்மீது அருள் இருந்தால், இரவுக்காலத்தில் நான் துயரால் துடிதுடிக்க, என்னை இப்படி விட்டுவிட்டுச் செல்வாரா? அவருக்கு என்மேல் அருள் துளியுமில்லையடீ! அவரைப் பிரிவதால் நான் வருந்துவதைப்போல், என்னைப் பிரிவதால் அவருக்கு வருத்தம் இருந்தாலல்லவா என்னைப்பற்றி அவர் நினைக்கப்போகிறார்!" என்று தலைவி வருந்துகிறாள்.

"அவர் உன்னைப்பற்றி நினைக்காமல் இருக்கமாட்டாரடீ! இவ்வளவு நாட்கள் அவ்வளவு அன்போடு இருந்துவந்தவர், அவ்வளவு விரைவாகவா உன்னை மறந்துவிடுவார்? அவர் உன்னை மறக்கமாட்டாரடீ! விரைவில் வந்துவிடுவார், பார்!" என்று தோழி ஆறுதல் மொழி கூறுகிறாள்.

"ஏடீ! அவரை நல்லவர் என்று நினைக்காதேடீ! அவர் பண்பிலே நாரையைப் போன்றவர்! நீ அடிக்கடி பார்த்திருப்பாயே கடற்கரையில், வாடைக்காற்றினால் அசைந்து அசைந்து வளைந்து கிடக்கும் தாழை மரத்தின் கொம்பிலே உட்கார்ந்துகொண்டு, புதுப்புது மீன்களின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நாரையை. நாரைக்கும் அவருக்கும் ஒரு வேற்றுமையும் கிடையாது. நாரை புதுப்புது

மீன்களை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்; அவர் புதுப்புது மகளிரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார். அவ்வளவுதான்!" என்று தலைவி புலம்புகிறாள்.

தலைவியின் துன்பத்தைப் போக்கத் தோழி எவ்வளவோ ஆறுதல்மொழிகள் கூறிப்பார்க்கிறாள். தலைவியின் நிலையில் மாறுதல் ஏதும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. தலைவியின் அழகுத் தோற்றம் நாளுக்குநாள் குறைந்துகொண்டே போகிறது. இப்படியாகச் சிலநாட்கள் கழிகின்றன.

ஒருநாள் காலை, பொழுது விடிந்ததும் தலைவியைக் காணத்தோழி வருகிறாள். அவள் வியப்புதரும் காட்சியைக் கண்டு மலைத்துப்போய் நிற்கிறாள். காரணம், தலைவியின் தோற்றத்தில் சில பல மாறுதல்களைக் காண்கிறாள் தோழி. தலைவியிடம் என்றைக்கும் காணாத மகிழ்ச்சியும், முகமலர்ச்சியும் தென்படுகின்றன.

தோழி தலைவியைக் கட்டிப்பிடித்து, மகிழ்ச்சியால் உடலை ஒரு உலுக்கு உலுக்கி, "ஏடீ! நேற்றிரவு உன் காதலர் வந்தாரா? அவரோடு கூடிக் குலாவி மகிழ்ந்திருந்தாயா? எப்படி இவ்வளவு மகிழ்ச்சியோடு இருக்கிறாய்? என்னடீ? சொல்லடீ!" என்று தோழி துடிதுடிப்புடன் வினவுகிறாள்.

"ஆமாம்! அவர் வந்தாரடீ! ஆனால் வெளியாக வரவில்லை!"

"எப்படியடீ வந்தார்? யாருக்கும் தெரியாமல், மாறுவேடம் புனைந்து மறைந்து வந்தாரா?"

"அப்படியெல்லாம் ஏனடி அவர் வருகிறார்! அவருக்கும் நமக்குந்தான் உறவு அற்றுப்போய் விட்டதே!"

"பின் எப்படியடீ, வந்தார்?"

"நேற்று இரவு என் கனவிலே வந்தார்! வந்து......"

"பூ! இவ்வளவுதானா? இதற்குத்தானா இவ்வளவு ஆர்ப்பாட்டம்!"

இப்படித் தோழி கூறியதும் தலைவியின் முகத்திலே சிறிது வாட்டம் தோன்றுகிறது. தலைவியின் உள்ளக்கிடக்கையை அறிவோம் என்ற முறையில், "கனவிலே எப்படி வந்தார்? அவர் எப்படி நடந்துகொண்டார்? உன்னிடம் என்ன என்ன பேசினார்?" என்று தோழி கேள்விக்குமேல் கேள்வி அடுக்கிக்கொண்டே போனாள்.

"'உன்னைப் பிரியமாட்டேன்; பிரிந்தால் வருந்துவேன்; பின் உயிர்வாழமாட்டேன்' என்று முன்பு உறுதிமொழி கூறிய அவரைப் பிடித்துக்கொண்டு, 'நீர் என்னிடம் இருந்து எடுத்துக்கொண்ட எனது நலத்தைத் தாரீர்' என்று நான் வளைத்துக்கொள்வேன் போலேயும், அப்பொழுது அவர் எனது அழிந்த அழகையெல்லாம் சேர்த்துத் தருவார்போல என்னைச் சேர்த்து அணைத்து, 'இனி வருந்தாதே! உன் அழகையெல்லாம் மீண்டும் பெறு!' என்று கூறி என்னை அருள் செய்வான்போலேயும் நான் கனவு கண்டேன்" என்று தலைவி கூறுகிறாள்.

"ஓ! அப்படியா! இன்னும் என்னென்ன கூறினான்? கூறடீ பார்ப்போம்!" என்று தோழி கேட்கிறாள்.

"'என்னை மறந்ததுமட்டுமன்றி, என் மார்பின்மீது தூங்கும் தூக்கத்தையும் மறந்தீரல்லவா?' என்று கேட்டு, உள்ளம் நைந்தவளாய் அழுபவள்போல இருந்தேன். அதுகண்டு அவர் 'வலையிலே அகப்பட்ட மயில்போல, நீ காவலிலே அகப்பட்டுப் பெரிதும் வருந்துகிறாய்! இனி அப்படியெல்லாம் நேராது' என்று கூறி, என் காலடியில் அவர் தலைவந்து படியும் படியாகக் கீழே விழுந்து வணங்கினார். இந்தக் காட்சிகளும் என் கனவில் வந்தன" என்று தலைவி சிரித்துக்கொண்டே கூறுகிறாள்.

"நன்றாக இருக்கிறதே உன் கனவு! சொல்லு, சொல்லு! இன்னமும் என்னவெல்லாம் நடந்தன" என்று தோழி மேலும் ஆவலோடு, தலைவியின் ஆவலையும் தூண்டிவிட்டுக் கேட்கிறாள்.

அப்படிக் கீழே விழுந்து வணங்கும்போது, நான் என் கையில் கொண்டிருந்த மாலையைக் கோலாகக் கொண்டு அவரை அடிப்பவள்போல இருந்தேன், அப்பொழுது அவர் 'யான் செய்த தவறு யாது?' என்று கேட்டு, நடுநடுங்கிப்போய், 'நீ சரியாக என்னைப் புரிந்துகொள்ளாமையால், இவ்வாறெல்லாம் செய்கிறாய்!' என்று எனக்குத் தெளிவூட்டுபவர்போல இருந்தார். பிறகு விழித்துக்கொண்டேன்.

பிறகுதான் தெரியவந்தது நான் கண்டதெல்லாம் கனவு என்பது” என்று தலைவி மகிழ்கிறாள்.

“கனவில் அவர் வந்ததற்கே இவ்வளவு மகிழ்கிறாயே! அவர் நேரில் வந்துவிட்டால், நீ இன்னமும் எவ்வளவு மகிழ்ச்சி கொள்வாயோ?” என்று தோழி கேலி மொழி பேசுகிறாள்.

“ஏடீ! நான் கனவுதான் கண்டேன் என்றாலும், என்னிடமிருந்து சென்ற உயிர், மீண்டும் என்னிடம் வந்து சேர்ந்துவிட்டதைப் போன்றதொரு உணர்வு என்னுள்ளத்தே எழும்பிற்று. அதனால்தான் மகிழ்வுகொண்டேன். அந்த அழகான நெய்தல் நிலத் தலைவர் மீண்டும் என்னிடம் வந்து, என்னைப் போற்றிக் காப்பாற்றுவார் என்பதைப் போன்றதொரு எண்ணம், கனவு கண்டதன் மூலம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதனால் ஏற்பட்ட மகிழ்ச்சிதான் என் தோற்றத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கிறது” என்று தலைவி கூறுகிறாள்.

தோழி புன்முறுவல் பூத்த வண்ணம் “சரி! அவரது வரவை நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்போம்!” என்று கூறித் தலைவிக்கு மேலும் ஊக்கத்தை ஊட்டுகிறாள்.

ஃ ஃ ஃ

இது நெய்தற்கலி 11-ம் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு வரைந்த சொல்லோவியமாகும். தலைவனைவிட்டுப் பிரிந்து வருந்தும் தலைவியின் உளப்பாங்கையும், அவள் கனவு காணும் முறையையும், கனவிலே வந்த நிகழ்ச்சி அவளுக்கு எந்த அளவுக்கு மகிழ்ச்சியைத்தந்தது என்பதையும் எவ்வளவு அழகுறவும், நயம்படவும், இயற்கைப் போக்குடனும் ஆசிரியர் நல்லந்துவனார் எடுத்து விளக்கியுள்ளார் என்பது படித்துப் படித்து மகிழ்வதற்குரியதாகும்.

ஃ ஃ ஃ

தோ(ள்)துறந்(து) அருளா தவர்போல் நின்று
வாடை தூக்க வணங்கிய தாழை
ஆடுகோடு இருந்த அசைநடை நாரை
நளிஇரும் கங்குல் நம்துயர் அறியா(து)
அளியின்று பிணியின்று விளியாது நரலும்
கான(ல்)அம் சேர்ப்பனைக் கண்டாய் போலப்
புதுவது கவினினை என்றி ஆயின்
நனவில் வாரா நயனி லாளனைக்
கனவில் கண்டுயான் செய்தது கேளினி;

அலந்(து)ஆங்(கு) அமையலென் என்றானைப் பற்றிஎன்
நலம்தாரா யோஎனத் தொடுப்பேன் போலவும்
கலந்(து)ஆங் கேஎன் கவின்பெற முயங்கிப்
புலம்பல் ஓம்(பு)என அளிப்பான் போலவும்;

முலையிடைத் துயிலும் மறந்(து)ஈத் தோஎன
நிலையழி நெஞ்சத்தேன் அழுவேன் போலவும்
வலையுறு மயிலின் வருந்தினை பெரி(து)எனத்
தலையுற முன்னடிப் பணிவான் போலவும்;

கோதை கோலா இறைஞ்சி நின்ற
ஊதை அம் சேர்பனை அலைப்பேன் போலவும்

# வினாவும் விளக்கமும்

திரு ம. பொ. சிவஞானம் அவர்களின் தலைமை யின்கீழ் அமைக்கப்பட்டுள்ள தமிழக வடவெல் லைப் பாதுகாப்பு இயக்கத்தில், திராவிட முன்னேற் றக் கழகம் ஏன் பங்கேற்றுப் பணிபுரியலாகாது?

தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகிய நான்கும் மொழிவழி தனித்தனி மாநிலங் களாகப் பிரிந்து, இனவழி அவை நான்கும் திராவிடக் கூட்டாட்சியாக இணையவேண்டும் என்ற கருத்தைத் திராவிட முன்னேற்றக் கழ கம் தெள்ளத் தெளிய அடிக்கடி விளக்கிக் காட்டிவருகிறது.

சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழ்ப் பகுதி இப்பொழுது அநீதியான முறையில் ஆந்திரத் தோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அது தமிழகத்தோடு இணைக்கப்படுவதுதான் நீதிக்கு ஏற்ற முறையாகும் என்பதையும் சுட்டிக் காட்டவேண்டிய இடங்களிலெல்லாம் —சுட்டிக் காட்டவேண்டியபொழுதுகளிளெல் லாம் திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக் காட்டிவந்துள்ளது. "திராவிடநாடு திராவிடர்க் குத்தான்; சித்தூர் மாவட்டத் தமிழ்ப்பகுதி தமிழர்க்குத்தான்" என்று கழகப் பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் அடிக் கடி வற்புறுத்திக் கூறிவந்துள்ளார்கள்.

சென்னையில் 1951-ல் நடைபெற்ற மாநில மாநாட்டிலும், பிறகு நடைபெற்ற மாவட்ட மாநாடுகளிலும், பொதுக்குழுக் கூட்டங்களி லும் சித்தூர்த் தமிழ்ப் பகுதியும், நாஞ்சில் மாவட்டத் தமிழ்ப் பகுதியும், பிற காரைக்கால் பாண்டிச்சேரி பகுதிகளும் தமிழகத்தோடு இணைக்கப்படவேண்டும் என்பது குறித்த தீர் மானங்கள் பலவும் நிறைவேற்றப்பட்டிருக் கின்றன.

அண்மையில் திருச்சியில் கூடிய தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் தோழர் என். வி. நடராசன் அவர்கள் தலைமையின் கீழ்ச் செயற் குழு ஒன்றினை அமைத்துச், சித்தூர்த் தமிழ்ப் பகுதியைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்கான முயற்சிகளையும், நடவடிக்கைகளையும் அது அவ் வப்போது பொதுச்செயலாளரைக் கலந்து

---

யா(து)என் பிழைப்(பு)என நடுங்கி ஆங்கே
பேதையை பெரி(து)எனத் தெளிப்பான் போலவும்

ஆங்கு, [illegible]

கனவினால் கண்டேன் தோழி காண்(டு) அகக்
கனவில் வந்த கான(ல்)அம் சேர்ப்பன்
நனவில் வருதலும் உண்(டு)என
அனைவரை நின்ற(து)என் அரும்பெறல் உயிரே!

[நெய்தற்கலி—11]

[வாடை - வாடைக்காற்று; தூக்க - அசைக்க; வணங்கிய - வளைந்த; ஆடு - அசைகின்ற; கோடு - கொம்பு; அசை நடை - அசைந்த நடையினையுடைய; நளியிருங் கங்குல் - வருத்துதலிற் பெருமையையுடைய இராக்காலம்; பிணியின்று - காமநோய் இல்லாமல்; விளியாது நரலும் - ஓயாது கூச்சலிடும்; அலந்து - வருந்தி; அமையல் - உயிர்வாழமாட்டேன்; முயங்கி - அணைத்து; புலம்பல் - வருந்துதல்; ஓம்பு - காப் பாற்று; கோதை - மாலை; கோலா - கோலாக; இறைஞ்சி - அடிவணங்கி; ஊதை - ஊதைக்காற்று; பேதையை - அறியாமையை; அனைவரை - அந்த அளவுக்கு.]

கொண்டு செய்யவேண்டும் என்ற பொறுப்பினையும் அதனிடம் ஒப்படைத்தது.

அண்மையில் ஜூலை திங்கள் 10, 11-ம் நாட்களில், சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பொதட்டூர்ப் பேட்டையில் நடந்த, சித்தூர் மாவட்ட தி. மு. க. மாநாட்டில், சித்தூர்த் தமிழ்ப் பகுதியைத் தமிழகத்தோடு இணைப்பதற்கான வழி வகை காணும் தீர்மானம் ஒன்று சிறப்பாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும் சித்தூர், திருத்தணி போன்ற இடங்களில், தமிழர்கள் ஒன்றுகூடிக் கிளர்ச்சிகள் நடத்தியபொழுது, அப்பகுதிகளிலுள்ள கழகத் தோழர்களும், வட ஆற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களும் தங்கள் பங்கை ஏற்ற முறையில், ஏற்ற அளவில், ஏற்ற காலம் வரையில் செலுத்திவந்துள்ளார்கள். கழகத் தோழர்கள் அக்கிளர்ச்சிகளில் தடியடிபட்டும் கைதாகியும், சிறைபட்டும் அல்லல்கள் ஏற்றுக் கடமையாற்றிவந்துள்ளார்கள்.

இவற்றையெல்லாம் ஊன்றிக் கவனிப்பவர்கள், சித்தூர்த் தமிழ்ப் பகுதியைத் தமிழகத்தில் சேர்க்கவேண்டும் என்பதுபற்றிய ஆவலிலும் சரி, ஆர்வத்திலும் சரி, உணர்ச்சியிலும் சரி, ஊக்கத்திலும் சரி, எழுச்சியிலும் சரி, முயற்சியிலும் சரி திராவிட முன்னேற்றக் கழகம், வேறு யாருக்கும்—எந்தக் கட்சிக்கும் பின்வாங்கியதல்ல என்பதை எளிதில் இனிது உணரலாம்.

ஆந்திரத்தோடு அநியாயமாகச் சேர்க்கப்பட்டுள்ள தமிழ்ப்பகுதியைத் தமிழகத்தோடு சேர்ப்பதற்கு யாருடன் அறப்போர் நடத்துவது என்பதில்தான், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், தமிரசுக் கழகத்துக்கும் முக்கிய—நிரம்பிய மாறுபாடு அமைந்துகிடக்கிறது. இதை அறிஞர் அண்ணா அவர்கள் பொதட்டூர்ப் பேட்டை மாநாட்டில் நன்கு தெளிவுபெற விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

தமிழரசுக் கழகத் தலைவர் தோழர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தம்முடைய போராட்டம் பண்டித நேருவிடத்தில் அல்ல ; காமராசர் இடத்திலும் அல்ல; பிரகாசத்திடத்தில்தான் என்று திட்டவட்டமாக, அழுத்தந்திருத்தமாக அறிக்கை வெளியிட்டுவிட்டார். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் தி. மு. கழகத்தின் போராட்டம் முதலில் பண்டித நேருவிடத்தில்தான்; பிறகு காமராசரிடத்தில்; பிறகு பிரகாசத்திடத்தில் என்று முறையறிந்து தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

சித்தூர்த் தமிழ்ப்பகுதியை ஆந்திரத்தோடு சேர்த்தது மத்திய சர்க்காரேயொழிய, தோழர் பிரகாசம் படையெடுத்து வென்று அதனைச் சேர்த்துக்கொண்டுவிடவில்லை. எனவே அதனைப் பிரித்துத் தமிழர்க்குக் கொடுக்கவேண்டிய பொறுப்பு மத்திய சர்க்காரைச் சேருமேயொழிய, தோழர் பிரகாசத்துக்கு அந்த உரிமை இல்லை. தோழர் பிரகாசமும் ஆந்திரச் சட்டமன்றமும்சேர்ந்து சித்தூர்த் தமிழ்ப்பகுதியைத் தமிழகத்தோடு இணைத்துவிடுவது என்று முடிவு செய்தாலும், மத்திய அரசாங்கத்தின் அனுமதியில்லாமல், அவர்கள் விருப்பப்படி ஏதும் செய்ய இயலாது. தவறு நேரு சர்க்காரிடத்தில் அமைந்திருப்பதால், அத்தவற்றினைப் போக்க, நேரு சர்க்காரோடு போரிடவேண்டிய இன்றியமையாமையில் இருக்கிறோம் என்று தி. மு. கழகம் கூறுகிறது. நியாயத்திற்கு மாறுபடாதவகையில் நேரு சர்க்கார் சித்தூர்த் தமிழ்ப் பகுதியைத் தமிழகத்தோடு இணைத்துவிட கட்டளை பிறப்பித்தால், அதனைப் பிரகாசம் சர்க்கார் மாற்றத்தான் முடியுமா? அல்லது படை திரட்டி மீட்கத்தான் முடியுமா? நேரு சர்க்காரின் முடிவைப் பிரகாசம் சர்க்கார் ஏற்றுத்தான் தீரவேண்டுமேயல்லாது, மாற்றியமைக்க இப்பொழுது வல்லமையில்லையே! நிலைமை இவ்வாறு இருக்க, பிரகாசம் சர்க்காருடன் மோதிக்கொள்வதற்கான போராட்டம் நடத்துவதில் என்ன உருவான பலன் கிடைக்கக்கூடும்! தமிழர்—தெலுங்கர் பகையுணர்ச்சி தேவையில்லாத அளவுக்கு வளர அது வழிகோலுமேயல்லாது, பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான வகை கிடைக்காதே! எனவேதான் இது குறித்து நேரு சர்க்கார் நட்பான முறையில் அமைதியாக நீதிவழங்க முற்பட்டால் தி. மு. கழகம் அதனை மனமுவந்து வரவேற்கும்; அப்படிக் கில்லாமல் போராடித்தான் நீதியை நிலைநாட்டவேண்டிய நிலைமை ஏற்பட்டால், நேரு சர்க்காருடன் நேரடியாகப் போராடிப் பெறுவதற்கான வழிவகைகளை பொதுச் செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆராய்ந்துவருகிறார்கள். நிலைமைகளை ஆராயவும், சூழ்நிலைகளை உருப்படுத்தவுமே அறிஞர் அண்ணா அவர்கள் சிலகாலம் இடைவெளி கேட்டுள்ளார்கள். தி. மு. கழகப் போராட்டம்



# தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

## சிறுமிகள் அணியும் பாடி—பாவாடை

இவ்வுடை இடுப்பை இறக்கிப் பிடிக்காமலும், சிறு குழந்தைகள் அடிக்கடி கழற்றிவிடாமலும் இருப்பதற்காக உடுத்தும் உடையேயாகும். இவ்வுடைக்குமேல், சோலி அல்லது ப்ளவுஸ் இணிவது வழக்கம்.

### அளவுகள்

இடுப்புவரை முதுகு நீளம் 9 அங்.
முழு நீளம் 28 ,,
பாடிச் சுற்று அளவு 22 ,,

1-ல் இருந்து 0 வரை $9\frac{1}{2}$ அங்.
(முழு நீளம் $+\frac{1}{2}$ அங். தையலுக்கு)
2-ல் இருந்து 0 வரை 5 அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $\frac{1}{2}$ அங். குறைவு)
3-ல் இருந்து 0 வரை $1^7/_8$ அங்.
($^1/_{12}$ மார்பளவு)
4-ல் இருந்து 0 வரை $3\frac{3}{4}$ அங்.
($^1/_6$ மார்பளவு)
5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$ ,,
6-ல் இருந்து 4 வரை நேர்கோடு இணைக்க.
7-ல் இருந்து 2 வரை 7 அங்.
($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{2}$ அங்.)
8-ல் இருந்து 1 வரை 7 அங்.
9-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ ,,
10-ல் இருந்து 0 வரை 1 அங்.
11-ல் இருந்து 7 வரை 7 ,,
($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{2}$ அங்.)
12-ல் இருந்து 11 வரை 5 அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $\frac{1}{2}$ அங். குறைவு.)
13-ல் இருந்து 12 வரை $9\frac{1}{2}$ அங்.
(முழுநீளம் $+\frac{1}{2}$ அங். தையலுக்கு)
14-ல் இருந்து 13 வரை $\frac{1}{2}$ அங்.
(14-க்கும் 15 க்கும் வளைவாக படத்தில் உள்ளபடி இணைக்கவும்)
15-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ அங்.
16-ல் இருந்து 12 வரை $2\frac{1}{2}$ அங்.
17-ல் இருந்து 12 வரை $1^7/_8$ ,,
($^1/_{12}$ மார்பளவு)
18-ல் இருந்து 12 வரை $3\frac{3}{4}$ ,,
($^1/_6$ மார்பளவு)
19-ல் இருந்து 18 வரை $\frac{1}{2}$ ,,
20-ல் இருந்து 18 வரை நேர்கோடு இணைக்க.

1, 10, 3, 5, 7, 9, 1 எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள்.

14, 15, 7, 19, 17, 16, 14 எண்கள் முன் பக்கத்தை இணைப்பவைகள்.

கழுத்தும் தோள்வளைவும் $\frac{1}{4}$ அங்குலம் மடித்துத் தைக்கவும். பின்பக்கம் H, H என்ற இடத்தில் திறப்பு (ஓப்பன்) அமைத்துக்கொள்ளவும்.

(தொடரும்)







தமிழர்க்கும் தெலுங்கர்க்கும் இடையில் நட்புறவை வளர்க்கும் விதத்திலும் அதே நிலையில் அவரவர்க்குரிய உரிமைகளைக் காப்பாற்றும் வகையிலும், நேரு சர்க்காரைப் பணியவைக்கும் விதத்திலும், காமராசர் சர்க்காரைத் தூண்டும் முறையிலும், பிரகாசம் சர்க்காரை இணங்க தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களின் பிரகாசத்திடத்து மட்டுமே கொள்ளும் போராட்டம் பகை உணர்ச்சியை வளர்க்குமே யல்லாது உருவான பலனைத்தாராது. எனவே தான் தி. மு. கழகம் தமிழரசுக் கழகத்தோடு இணைந்து நின்று பணியாற்றமுடியாத நிலைமை

Regd. No. M 6296 MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

# வெண் சங்கு சியக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

## செல்வம் - ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

உரிமையாளர்: S. பெத்தண்ணா நாடார்
3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

## மன்றம்

**மலர் - 2**

**1953 - 54**

24 இதழ்கள்கொண்டது
அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட
**வால்யூம் விலை ரூ. 8-0-0**

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப் படாமல் அனுப்ப ரூ. 6-12-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, **மன்றம்,**
26, நைனியப்பன் தெரு: மண்ணடி,
சென்னை-1.

## மன்றம் பதிப்பக வெளியீடுகள்

இரா. நெடுஞ்செழியன் M. A.
எழுதியவை

| | |
|---|---|
| **கண்ணீரும் செந்நீரும்** | |
| வளர்த்த கழகம் | 0—12—0 |
| மறைந்த திராவிடம் | 0— 3—0 |

இரா. செழியன் M. A.
எழுதியவை

| | |
|---|---|
| ராஜாதி ராஜா | 0—12—0 |
| பொது அறிவு | 0— 8—0 |

வியாபாரிகட்கு 25% கழிவு. வி. பி. மூலம் அனுப்ப அதன் கட்டணம் தனி.

விபரங்கட்கு:

நிர்வாகி, **மன்றம் பதிப்பகம்,**
26, நைனியப்பன் தெரு,
மண்ணடி :: சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1.